# யாழ். மாவட்டத்தில் 5,250 ஏக்கரில இருபெரும் குடியேற்றத் திட்டங்கள்


Registered as a News paper in Ceylon

விலை சதம் 15 ★★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

மலர் 11

இதழ்: 17

தபால்பெட்டி எண்: 49

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் மாசி 16 ஜுஹஜ்: 9 வியாழக்கிழமை [27-2-69]


யாழ்ப்பாணம், வியாழன்

இந்த ஆண்டு முடிவதற்குள் யாழ்ப்பாணமாவட்டத்தில் மேலும் இரண்டு குடியேற்றத்திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர விவசாய அமைச்சும், காணி நீர்ப்பாசன அமைச்சும் முடிவுசெய்துள்ளன. திட்டமிடப்பட்ட இரண்டு குடியேற்றத்திட்டங்களும் பூநகரியிலும், கனகாம்பிகைக் குளத்திலும் நடைபெறவிருக்கின்றன.

பூநகரியில் நட கவிருக்கும் குடியேற்றத்திட்டம் இதுவரை வடக்கில் நடைபெறுத மிகப்பெரிய அளவில் நட(க்)கும். இங்கு 5000 ஏக்கர் நிலத்தை கஸ்கொட்டை உற்பத்திக்காக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் தலா 23 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர் வரை வழங்கப்படலாம்.

க..காம்பிகைக் குளத்தில் மத்தியதர வகுப்பினருக்கு வழங்கவென 250 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது உபஉணவு உற்பத்தித் திட்டத்திற்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அடுத்த மாதம் வடக்கே வரும் பிரதமர் ஆரம்பித்துவைக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு குடியேற்றத்திட்டத்துக்குமான விண்ணப்பங்கள் இப்போது கோரப்பட்டுள்ளன. (கா. நி.)

## சிங்களவராக்கும் முயற்சி

### எஸ். ஜே. வி. கவலை

அளவெட்டி, புதன்

இலங்கையிலே சிறிது சிறிதாக உரிமைபெற்று வாழும் தமிழ் மக்களை சிங்களவர்களாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இம்முயற்சிகளை முறியடிக்க அண்ணா காட்டிய வழியில் செல்ல வேண்டும். இவ்வாறு ஊறணி மயிலிட்டி தமிழரசு வாலிப முன்னணியினரால் ஊறணி புனித அந்தோனியார் சனசமூக நிலைய முன்றலில் நடாத்தப்பட்ட அண்ணா அஞ்சலிக்கூட்டத்தில் கலந்துரையாற்றுகையில் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினர்.

எஸ். ஜே. வி. தொடர்ந்து பேசுகையில், ''உலகில் பல நாடுகளில் தமிழர்கள் வாழ்கிருர்கள். ஆனல் இலங்கையிலும் இந்தியாவிலும் வாழும் தமிழர்கள் தங்களுடைய நாகரீகத்துடனும், கலையுடன் வாழ்ந்து வருகிருர்கள். மற்றும் தேசத்தில் உள்ள தமிழர் காலப்போக்கில் அந்நாடுகள் நாகரீகத்தில் ஊறிவுடுகிருர்கள். அண்ணா தமிழினத்துக்கும் தமிழுலகுக்கும் தொண்டாற்றியதாலேயே நாம் இன்று அவரை நினைக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்று கூறினர்.

ஸ்ரீமாவைக் கொல்லசதி:

## தகவல் கொடுத்தவர் புத்திசுவாதீனமற்றவராம்

கொழும்பு, புதன்

எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவைக் கொலைசெய்ய சதிநடப்பதாகத் தகவல் கொடுத்த வாலிபர் புத்திசுவாதீனமற்றவரெனக் கூறப்படுகிறது. ஸ்ரீமாவுக்கு சாதகமாக இத்தகவலைக் கொடுத்ததால் அவர்களின் உதவியைக்கொண்டு ஏதாவது தொழில் வாய்ப்புப் பெறலாமென இவர் கருதினராம்.

மெக்கானிக் தொழில் பார்க்கும் இவருக்கு வயது 20 என்றும்; வேலை வசதி பெறும் நோக்கத்துடனேயே இவர் இவ்விதம் கூறியதாகவும் பொலிசாரிடம் சாட்சியமளித்துள்ளாராம். இதுசம்பந்தமாக விசாரணை செய்த பொலிஸ் வட்டாரம் இவர் மீது வழக்குத் தொடர்வதுபற்றி ஆராய்கிறது.

கடந்த 9ம் திகதி கண்டி மல்வத்தை மகா நாயக்க தேரோவின் ஈமச்சடங்கில் கலந்து கொண்டுவிட்டு கொழும்பு திரும்பும்வழியில் ஸ்ரீமாவோவைக் கொலைதாக செய்ய சதிநடைபெற்ற குறிப்பிட்ட வாலிபர் தகவல் கொடுத்திருந்தார்.

# இஸ்ரேல் பிரதமர் எஷ்கோல் மாரடைப்பால் மரணம்

## தற்காலிக பிரதம மந்திரி இகோல் எலோன்

ஜெருசலம், பெப்ரவரி 26

**இஸ்ரேல் பிரதம மந்திரி திரு. லெவி எஷ்கோல் இன்று காலை மாரடைப்பினுல் காலமானுர். அவருக்கு வயது 73. கடந்த சில மாதங்களாகவே அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்.**

1963-ம் ஆண்டு ஜுன் மாதம் 16-ந் திகதி டேவிட் பென்குரியன் பிரதமர்பதவியை ராஜினுமாச் செய்ததும் இஸ்ரேல் பிரதமராக திரு. லெவி எஷ்கோல் பதவியேற்ருர். 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ந் திகதி நடந்தபொதுத்தேர்தலில் திரு. எஷ்கோலின் கூட்டணிக் கட்சி வெற்றியீட்டி ஆட்சிக்கு வந்தது. அன்று தொடக்கம் இன்றுவரை அவர் பிரதமராகப் பதவிவகித்து வந்தார்.

இஸ்ரேல் அரபு நெருக்கடி நீடித்து வருவதால் திரு. எஷ்கோலின் மறைவைத் தொடர்ந்து வெளிவிவகார

கடுமையாகத் தாக்குண்டு மாண்டுள்ளதாக பாலஸ்தீன் கூறியுள்ளதை இஸ்ரேல் அரசாங்கம் நிராகரித்து விட்டது. இவருடைய மரணத்திற்கும் ஐக்கிய அரபுக்குடியரசு இஸ்ரேல் தாக்குதலுக்கும் தொடர்பில்லையென இஸ்ரேல் அறிவித்துள்ளது.

### தற்காலிக பிரதமர்

இ(ஸ்)ரேல் பிரதமர் திரு. எஷ்கோல் காலமானதைத் தொடர்ந்து திரு. இகோல் எலோன் காபந்து அரசாங்க தற்காலிக பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். வருகிற டிசம்பர் மாதம் பொதுத் தேர்தல் நடைபெறும்வரை திரு. எலோன் தற்காலிக பிரதமராகக் கடமையாற்றுவார்.

## நெல்லியடியில் இன்று 235-வது சுவீப் சீட்டிழுப்பு

### உபசபாநாயகர் கையில் லட்சாதிபதி

உடுப்பிட்டி, வியாழன்

இன்று மாலை நெல்லியடியில் நடைபெறும் 235வது சுவீப்சீட்டிழுப்பில் லட்சாதிபதியாகப்போகிறவர் யார் என்பது தெரிந்துவிடும்.

வடமராட்சியில் தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்பு நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். இன்று மாலை 4-15 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் இச்சீட்டிழுப்பு நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து பரிசுக்கு உரிய ரெனேல்ட்16 ரெனேல்ட்8 ஆகிய இரு கார்களும் நெல்லியடி பஸ் நிலையத்தில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பலத்த பொலிஸ் பந்தோபஸ்தும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதித் தேசிய லொத்தர் சபையின் பிரதான முகாமையாளர் திரு. க. வேலுப்பிள்ளையின் வேண்டுகோளைத் தொடர்ந்தே 235வது சீட்டிழுப்பு நெல்லியடியில் நடாத்தப்படுகின்றது. இம்முறை வடமராட்சியிலேயே கூடுதல் டிக்கட்டுகள் விற்பனையாகியுள்ளனவென அவர் தெரிவித்தார்.

முதல் பரிசு பெறும் லட்சாதிபதிக்குரிய டிக்கட்டை உப சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.மான திரு. மு. சிவசிதம்பரம் இழுப்பார்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் இரண்டாவது பரிசுக்குரிய

## பாகிஸ்தானில் 10-ம் திகதி

## நிராகரிப்பு

சென்னை, பெப். 26

அண்மையில் தமிழகத்தில் நடைபெற்ற ஹரிஜன தீவைப்புச்சம்பவம் சம்பந்தமானபிரேரணை கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களால் ராஜ்யசட்டசபையில் இன்று கொண்டு வரப்பட்டபோது சபாநாயகர் இதனை நிராகரித்தார்.

ஹரிஜன தீவைப்பு சம்பவத்தில் 2 வீடுகள் தீக்கிரையானதாகவும், 5 வீடுகள் நாசமானதாகவும் இதுசம்பந்தமாக 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த தமிழக முதல்வர் திரு. கருணுநிதி நீதிமன்றத்தில் இவற்றுக்கான வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளனவாதலால், ஒத்திவைப்புப் பிரேரணை அவசியமில்லையெனத் தெரிவித்தார். இப்பிரேரணையை கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த 3 அங்கத்தவர்கள்

தமிழரசுக் கட்சி தலைவர் தெரிவு

## ஒப்பிரச்னை தீர்வுக்கு 4(ம்) திகதிவரை அவகாச(ம்)

## யாழ். ஆஸ்பத்திரி நவீனவார்ட்டுகள்

நல்லூர், புதன்

நவீன முறையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ள யாழ். ஆஸ்பத்திரி பழைய வார்ட்டுகள் அடுத்த மாதம் 1-ம் திகதி திறந்து வைக்கப்படுகிறது. 3,4,5, 6-ம் வார்ட்டுகளே புது உருப்பெற்ற வார்ட்டுகளாகும். இந்த வார்ட்டுகள் திருத்தவேலைக்காக இதுவரை நாளும் மூடி வைக்கப்பட்டிருந்தன.

5-ம் வார்ட்டுக்கு மேல் மாடியிலுள்ள 6-ம் வார்ட் இப்போது தனித்தனிஅறையாகக் கட்டப்பட்டுள்ளது. தொற்று நோயாளர் இங்கு அனுமதிக்கப்படுவர். நோயாளர்களுக்கு ஏற்ற வகையில் இந்த அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. முன்னர் 6-ம் வார்ட்டில் குளிக்கும் வசதிகள் இல்லாததால் நோயாளிகள் இதில் வந்து குளிக்கவேண்டிய சிரமம் இருந்தது இப்போது 6-ம் வார்ட்டிலேயே வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. யாழ். ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரிண்டனின் துரித முயற்சியினுலேயே இவை அழகான முறையில் விரைவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்களும் நெல்லியடி பஸ் நிலையத்தில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் காட்சிக்கு

## பாகிஸ்தானில் 10-ம்திகதி மகாநாடு

ராவல்பிண்டி, பெப்.16

அதிபர் அயூப்கானும் எதிர்க்கட்சித் தலைவர்களும் அடுத்தமாதம் 10-ம்திகதி சந்தித்துப் பேசுவார்கள். இன்று காலையில்நடந்த ஆலோசனைக் கூட்டம் 35 நிமிஷங்கள்மட்டுமே நீடித்தது.

உப சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.மான திரு. மு. சிவசிதம்பரம் இழுப்பார்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் இரண்டாவது பரிசுக்குரிய டிக்கட்டை எடுப்பார்.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசா மூன்ருவது பரிசு பெறும் டிக்கட்டை எடுப்பார். இதர நூறு ஆறுதல் பரிசுகள் பெறும் டிக்கட்டுகளை உடுப்பிட்டி, பருத்தித்துறைத் தொகுதி மக்கள் எடுப்பார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

க்கும் இன்று வரை அவர் பிரதமராகப் பதவிவகித்து வந்தார்.

இஸ்ரேல் அரபு நெருக்கடி நீடித்து வருவதால் திரு. எஷ்கோலின் மறைவைத் தொடர்ந்து வெளிவிவகார மந்திரி திரு. எபான் அல்லது பாதுகாப்பு அமைச்சர் திரு. மோவி டயான் பிரதமர் பதவிக்கு விரைவில் தேர்ந்தெடுக்கப்படக்கூடுமெனக் கூறப்படுகிறது.

கடந்த திங்களன்று பிரதமர் எஸ்கோலின் நாட்டுபுறத்தில் குண்டு வீச்சு ரெக்கெட் வீச்சு முதலிய தாககுதல்கள் நடைபெற்றதைத் தொடர்ந்தே இவர்

# சுகாதார அமைச்சருக்கு ஆடம்பரமற்ற வரவேற்பு

குரும்பசிட்டி புதன்

இன்றுகாலை சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொண்டு பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தபோது ஆடம்பரமற்றமுறையில் அமைதியாக வரவேற்பளிக்கப்பட்டது,

அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம் வைத்தியசேவை சுப்பிரிண்டன், உதவி சுப்பிரிண்டன், மயிலிட்டி கிராமசபைத் தலைவர் உட்பட பலர் விமான நிலையத்துக்கு சமூகம் கொடுத்திருந்தனர்.

காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. சதாசிவம் தலைமையிலான குழுவொன்று செனட்டர் திரு. எஸ். நடராஜா தலைமையில் அமைச்சர் திரு சேனநாயகாவை சந்தித்து காங்கேசன்துறை ஆஸ்பத்திரி பிரனைபற்றி பேச்சுவார்த்தை நடத்திஞர்கள்.

தெல்லிப்பளையில் 35 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டு வரும் ஆஸ்பத்திரி திறக்கப்பட்டதும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியை மூடவேண்டாமெனவும் தொடர்ந்து காங்கேசன்துறை ஆஸ்பத்திரியை ஒரு அப்போதிக்கரியுடன் இயங்கும் மத்திய வைத்தியசாலையாக நடாத்த வேண்டுமெனவும் தூதுக்குழுவினர் விடுத்த வேண்டுகோளை அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

அரசாங்க நன்கொடை எதுவுமின்றி கடந்த மூன்று வருடங்களாக இயங்கும் மயிலிட்டிக் கிராமசபையின் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அடுத்த ஆண்டுகளில் நன்கொடைப்பணம் வழங்குவதாகவும் தம்மைச் சந்தித்துப்பேசிய மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. வி. கிருஷ்ணசாமிக்கு அமைச்சர் வாக்குறுதி கொடுத்தார்.

## ''பிரதமர்விஜயம் பற்றி ஏன் அறிவிக்கவில்லை?''

### பண்டிதர் கேட்கிருர்

யாழ்ப்பாணம், வியா.

''அடுத்தமாதக்கடைசியில் பிரதமர் கிளிநொச்சித் தொகுதிக்கு விஜயம் செய்வாரா? அப்படியொரு திட்டமிருப்பின் எனது தொகுதிக்கு வருவது பற்றி என்னுடன் கலந்தாலோசிக்கவில்லையே! அமைச்சர் ஒருவர் ஒரு தொகுதிக்கு விஜயம் செய்யும்போது அந்தந்த தொகுதி எம். பிக்களுடன் முதலில் தொடர்புகொள்வதே முறையாகும் இதனுலேயே இக்கடிதத்தை தங்களுக்கு எழுதவேண்டிய நிலைக்குள்ளானேன்'' என்று பிரதமரின் செயலாளர் திரு. ஆர். பி. வீரக்கோனுக்கு கிளிநொச்சிஎம்.பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர்விஜயம் செய்வது பற்றி எகள் எவருடம். பிக்னும் தொடர்புகொள்ளாமல், அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளதாக அறிகிருேமென்றும், அதுபற்றி தமக்கும் எழுதும்படியும் பண்டிதர் தமது கடிதத்தில் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (ந. நி)

## தமிழ்நாடு உபசபாநாயகர் போட்டிஇல்லை

சென்னை, பெப். 26

தமிழ்நாடு சீழ்சட்டசபையின் உபசபாநாயகர் பதவிக்கு திருச்செந்தூர் தொகுதி எம். எல். ஏ. திரு. எட்மண்ட் பெர்னண்டோ போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். உபசபாநாயகர் பதவிக்கு திரு. பெர்னண்டோ மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருப்பதாகவும்அவர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சபாநாயகர் திரு. கோவிந்தன் அறிவித்தார்.

தமிழரசுக் கட்சி தலைவர் தெரிவு

## இடப்பிரச்னை தீர்வுக்கு 4[illegible] திகதிவரை அவகாச[illegible]

யாழ்ப்பாணம்,வியா.

தமிழரசுக் கட்சித் தலைவர் தெரிவு அடுத்தமாதம் 11ம் திகதி யாழ்ப்பாணத்திலேயே நடக்கலாமெனத் தெரியவருகின்றது. இதற்கான கடிதமொன்றை தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரான திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. சகல செயற்குழு உறுப்பினர்களுக்கும் நேற்று அனுப்பிவைத்தார்.

திரு. அமிர்தலிங்கம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தமிழரசுக் கட்சித்தலைவர் தெரிவில் திரு. இராசமாணிக்கம் எம். பி. யும், திரு. கே. ஜெயக்கொடியும் போட்டியிடுகின்ருர்கள் என்றும் இத் தெரிவை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டுமென திரு. இராசமாணிக்கம் எம். பி. கேட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

திரு. இராசமாணிக்கத்தின் நியாயங்களும் சரியானவையாயிருக்கின்றனவென்றும் யாழ்ப்பாணத்தில் இத்தெரிவை நடாத்த ஏதாவது ஆட்சேபங்கள் இருந்தால் 4-3-69க்கு முன்னர் தனக்கு அறிவிக்குமாறும் ஆட்சேபனை ஒன்றும் கிடைக்காவிட்டால் தெரிவு 11ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடக்கும் எனவும் இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடபகுதி அசைஸ் விசாரணை

## கொ[illegible] முயற்சி வழக்கில் எதிரிக்கு1000ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,வியா.

சங்கானைக் கொலை முயற்சி வழக்கில் எதிரியான முருகேசு அப்பையாவுக்கு 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு, இப்பணத்தில் 500 ரூபாவைக் காயமடைந்தவருக்குக் கொடுக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரி கைமோசக் கொலை முயற்சிக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கிஞர். இப்பணத்தை நான்கு தவணைகளில் கட்டும்படியும் எதிரியிடம் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கில் 67ம் ஆண்டு 15ந் தேதி சங்கானையில் முருகேசு அப்பையா என்பவர் நராணி அம்பலத்தை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம், அட்வகேட் எஸ். சிவபாக்கியநாதனின் உதவியுடனும் புறக்டர் கே. உலகநாதனின் அனுசரணையுடனும் ஆஜராஞர். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் எம். சிற்றம்பலம் ஆஜராஞர்.

## தரம் உயர்கிறது

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சி - முரசுமோட்டை உப தபாற்கந்தோர் 'பி' தரத்திலிருந்து 'ஏ' தரத்துக்கு அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து உயர்கிறது,

(ந. நி·)

யாழ். மாநகரசபையில்

# விசுவநாதன் வெளிநடப்பு

யாழ்ப்பாணம். வியா.

சமசமாஜக் கட்சி உறுப்பினர் திரு. ஏ. விசுவநாதன் நேற்று நடைபெற்ற யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் அவர் கொண்டுவந்த பிரேரணை பற்றி காரசாரமான விவாதம் நடைபெறுகையில் வெளிநடப்புச் செய்தார்.

மத்திய அரசாங்கத்துடன் சபை தமிழில் தொடர்பு கொள்ளும்போது அதன் சிங்கள மொழி பெயர்ப்பும் இணைக்க வேண்டுமென்ற விசுவநாதனின் பிரேரணைதோல்வியடைந்ததுஇப்பிரேரணையை திரு. ஏ. விசுவநாதனும் திரு. எஸ். மார்க்கண்டுவும் ஆதரித்து வாக்களித்தனர். மேயர் உட்பட 14 பேர் எதிர்த்து வாக்களித்தனர். 6பேர் நடுநிலைமை வகித்தனர். திரு. தம்பு கந்தையா சபையில் அந்நேரம் இருக்கவில்லை.

இப்பிரேரணையை வாக்குக்கு விடுமுன் மேயர் தற்பொழுது தமிழ் மொழியில்தான் நிர்வாகம் நடைபெறுவதாகவும் திரு. விசுவநாதன் இங்கு முன்னரே தமிழில் நடத்த வேண்டுமென்ற தீர்மானம் நடைமுறையில் இருப்பதாகவும் எடுத்துக் கூறிஞர்.

திரு. என். டி. செல்லத்துரை பேசுகையில் ஆட்சி மன்றத்தில் திரு. அண்ணுவுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்கு இடதுசாரிகள் எதிர்ப்புத் தெரிவித்ததிலிருந்து அவர்கள் தமிழ்மக்களில் வைத்திருக்கும் பற்று தெளிவாகியுள்ளதாக எடுத்துக் கூறிஞர். சிங்கள மொழி பெயர்ப்பு இருக்கக் கூடாதெனபலர் வற்புறுத்தினர். மேயர் எஸ். நாகராசா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

## அனலைதீவு கி. ச. தேர்தல் நியமனம்

யாழ்ப்பாணம், வியா.

அனலைதீவு கிராம சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் வருகிற மாதம் 13-ம் திகதி அனலைதீவு கிராம சபை அலுவலகத்தில் வைத்து ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. தற்போதைய கிராம சபையின் பதவிக்காலம் மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது.

வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளனவாதலால், ஒத்திவைப்புப் பிரேரணை அவசியமில்லையெனத் தெரிவித்தார். இப்பிரேரணையை கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த 3 அங்கத்தவர்கள் கொண்டுவந்தனர்.

காக இதுவரை நாளும் மூடி வைக்கப்பட்டிருந்தன.

5-ம் வார்ட்டுக்கு மேல் மாடியிலுள்ள 6-ம் வார்ட் இப்போது தனித்தனி அறையாகக் கட்டப்பட்டுள்ளது. தொற்று நோயாளர் இங்கு

செய்யப்பட்டுள்ளன. யாழ். ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரிண்டனின் துரித முயற்சியினாலேயே இவை அழகான முறையில் விரைவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

# ஸ்ரீமாவின் மகன் [illegible] அனுரா தேர்தலில் போட்டியிடுவார்

## சுதந்திரக்கட்சி செய்துள்ள முடிவு

கொழும்பு, புதன்

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் மகனுன திரு. அனுரா பண்டாரநாயகா வருகிற பொதுத்தேர்தலில் தோம்பே தொகுதியில் போட்டியிடலாமெனத் தெரியவருகிறது.

திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகாவின் தேர்தல் தொகுதியான தோம்பேயில் திரு. அனுரா பண்டாரநாயக்கா போட்டியிட்டால், திரு.பீலிக்ஸ் கம்பகாதொகுயில் திரு. எஸ். டி. பண்டாரநாயகாவுடன் போட்டியிடுவாரென்றும், தோம்பே தொகுதியில் திரு. அனுரா போட்டியிடாவிட்டால் கம்பஹா தொகுதியில் திரு. எஸ். டி. பண்டாரநாயகாவுடன் போட்டியிடுவார்என்றும் தெரிகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட உத்தேகித்திருக்கும் திரு. அனுரா பண்டாரநாயகவுக்கு தேர்தலில் வாக்களிக்கும் உரிமையும் வருகிற தேர்தலிலிருந்தே ஆரம்பமாகிறது.

## காரினுல் மோதுண்ட சிறுமி துடிதுடித்து மரணம்

### யாழ்நகரில் கோர[illegible]பத்து

யாழ்ப்பாணம், வியா.

காரினுல் மோதுண்ட8வயதுச் சிறுமி ஒருத்தி, துடிதுடித்து ஸ்தலத்திலேயே மாண்ட பரிதாப சம்பவம் ஒன்று நேற்றுமாலை யாழ். இந்துக்கல்லூரி [illegible] கே. கே. எஸ் ரூேட் சந்தியில் நடைபெற்றது.

பாப்பையா சாரதாதேவி என்ற 8 வயதுச் சிறுமியே காரினுல் மோதுண்டு மாண்டவராவர். இதுசம்பந்தமாக காரச்சாரதியான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா சுந்தரலிங்கம் என்பவர் சந்தேகத்தின் பேரில் பொலிசார் கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளனர். ஸ்தலத்திற்குச் சென்று தற்காலிக மாஜிஸ்திரேட் திரு. கனகரத்தினம் விசாரணை நடத்திஞர். கைது செய்யப்பட்டுள்ள கார்ச்சாரதி இன்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் பதில் மாஜிஸ்ரேட்முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார். (ந. நி.)

## பேராசிரியர் காலமானுர்

கொழும்பு, வியா

இலங்கைப்பல்கலைக்கழகத்தின் முன்னுள் கணிதப் பேராசிரியரான திரு. எப். ஏச். வி. குலசேகரம், நமது 85-வது வயதில் கடந்த ஞாயிறன்று காலமானுர். கொடிகாமத்தைச் சேர்ந்தவரான இவர் யாழ்ப்பாணம் மந்திய கல்லூரி, சென்னை கிறிஸ்தவர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ருர்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆசிரியராகவும் சென்ஜோன்ஸ் கல்லூரி தலைமை ஆசிரியராகவும், கொழும்பு ரூேயல் கல்லூரி ஆசிரியராகவும் கடமையாற்றிய இவர் எட்டுவருடம் இலங்கைப் பல்கலைக் கழகத்தில், கணிதப் பேராசிரியராகக் கடமையாற்றிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 45 சப்பல் வீதி வீடுகள் விற்பனைக்கு உண்டு. தயவு செய்து போல். உடையார் வளவு பண்டத்தரிப்பு என்னும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். 700

### தேவை

மருந்து கலப்பவர்;

ஆனைக்கோட்டையில் சித்திரையில் ஸ்தாபிக்க இருக்கும் வைத்தியசாலைக்கு ஓர் மருந்துகலப்பவர்(Dispenser) தேவை. க. பொ. த. பரீட்சையில் இரசாயனவியலில் சித்தியெய்திய பத்திரத்துடனும் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 707 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 707

45வது தினம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

10-30, 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த

ஒளி விளக்கு

(ஈஸ்ட்மென் கலர்)

(எஸ். ரி. ஆர். வெளியீடு)

இணுவில்

ஸ்ரீ காலிங்கன்

தினசரி 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30

ஜெய்சங்கர் விஜயா நடித்த

பட்டணத்தில் பூதம்

வின்ஸர்

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த

குடியிருந்த கோயில்

மானிப்பாய்

வெஸ்லி சினிமா

தினசரி 6-30, 9-30 மணி

பிரிபோயா. போயா 2-30 மணி

அசோகன் - K. R. விஜயா நடித்த

காட்டுராணி

MANOHARA

JAFFNA

Daily at 4-45, 7-00, & 9-45 p. m.

Pre Poya Poya 10-30 a. m.

Jeewarani

in


# யாழ். நகரில் 'பாட்மின்டனில்' புதிய உற்சாகம்

யாழ்ப்பாணம், வியா.

''யாழ்ப்பாண கிறிஸ்தவ வாலிபர் சங்கம்'' ''பாட்மின்டன்'' ஆட்டத்தை, யாழ்ப்பாணத்தில் பெருமளவில் விருத்தி செய்வதற்கு பெருமுயற்சிகள் எடுத்து வருகின்றது.

இச்சங்கத்தின் சுறுசுறுப்பு மிக்க உறுப்பினர்களும், விளையாட்டமைச்சின் பொறுப்பாளர் திரு. யேசுதாசனும் இப் போட்டிக்கு புத்துயிர் அளிக்க முன்வந்துள்ளனர். பத்தாண்டுகளுக்கு மேல் இலங்கை பாட்மின்டன் சங்கத்தின் துணைச் செயலாளராகவிருந்த திரு. கே. கனகராசா இம்முயற்சிக்கு உறுதுணை புரிகிறார்.

திரு. கனகராசா 1964-ம் ஆண்டு மக்கள் சீன குடியரசில் பாட்மின்டன் பயிற்சி பெற்றவர். இவருடைய மேற்பார்வையிலே வாரம் தோறும் நான்கு நாட்கள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இப் பயிற்சியில் இம்முறை பெண்களும் கூடுதலாக பங்குபெறுகிறார்கள். சுமார் 20 பெண்களுக்கு மேல், காலை வேளையில் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

யாழ்ப்பாண கிறிஸ்த்தவ வாலிபர் சங்கத்தினால் நடாத்தப்படும் வருடாந்த பாட்மின்டன் போட்டி, வருகிற மாதம் 3-ம் திகதி சங்க மண்டபத்தில் மின்னொளியில் ஆரம்பமாகவிருக்கின்றது. இறுதிப் போட்டி 11-ம் திகதி நடைபெறும். (தே. நி)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி சில முடிவுகள்

புத்தூர், புதன்

புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் கவிஞர் மு. செல்லையாவின் ஞாபகார்த்தச் சுற்றுக்கேடயத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 20, 21, 23, 25-ந் திகதிகளில் நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

வல்வெட்டித்துறை 'ஏ' பிரிவு உதயசூரியன் விளையாட்டுக்கழகத்திற்கும் வதிரி 'ஏ' பிரிவு வீன்னேஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் வின்னேஸ் விளையாட்டுக்கழகம் 3-0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு ஏ. எஸ். பவலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

வதிரி 'ஏ' பிரிவு வின்னேஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் அல்வாய் 'பி' பிரிவு மனோகரா விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் வின்னேஸ் விளையாட்டுக் கழகம் 4-0 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு ந. ஜெயராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

வல்வை 'சி' பிரிவு ஹெலியன் விளையாட்டுக்கழகத்திற்கும் கட்டைப்புளியடி அல்வாய் 'பி' பிரிவு மனோகரா விளையாட்டுக் கழகத்திற்கும் வல்வை 'சி' பிரிவு ஹெலியன்ஸ் விளையாட்டுக்கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் ஹெலியன்ஸ் விளையாட்டுக்கழகம் 10-1 கோல்களால் வெற்றி பெற்றது.

## இன்றைய பலன்

வியாழக்கிழமை (27-2-69)

மாசி மாதம், 16 உ

திதி- ஏகாதசி.

நட்சத்திரம்- திருவாதிரை பகல் 3-31 மேல் புணர்பூசம்.

ராகுகாலம்- 1-59 3-29.

சுபநேரம் 7-59— 9-29.

இன்று பிறந்தவர்களுக்கு- விவசாயிகளுக்கு வெற்றிக்குரிய ஆண்டாகும். தானிய விருத்தியும் தனச்சிறப்பும் குடும்பஸ்தர்களுக்கு குதூகல மிகுதியும் பிணி உடை

கொக்குவில் இந்து

## இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கும், கொக்குவில் இந்து கல்லூரிக்குமிடையில் வைத்தீஸ்வரா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், கொக்குவில் இந்து வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து! மொத்தம் 128 ஓட்டங்களைப் பெற்றது.

வைத்தீஸ்வரா வித்தியாலயம் முதல் இன்னிங்ஸில் 31 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 82 ஓட்டங்களையும் பெற்றது.

ஆட்ட முடிவில் கொக்குவில் இந்து மிக இலகுவாக எதிர் கோஷ்டியை இன்னிங்ஸாலும் 15 மேலதிக ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. (தே. நி)

—

## 'வளர்மதி' வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

அரியாலையின் 'சுதேசிய விழா'வையொட்டி நடாத்தப்பட்டு வரும் ''மென்பந்து நொக்கவுட்'' போட்டியில், வளர்மதி மன்றம் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதி மன்றம் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கெங்காதரன் 61 ஓட்டங்களைப் பெற்றார்.

வளர்மதி மன்றத்துடன் எதிர்த்து போட்டியிட்ட ''ஓல் கெலடியன்ஸ்'' முதல் இன்னிங்ஸில் மொத்தம் 41 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 59 ஓட்டங்களையும் பெற்றது.

போட்டி முடிவில் வளர்மதி மன்றம், எதிர்க் கோஷ்டியை இன்னிங்ஸாலும் 44 மேலதிக ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. (தே. நி)

—

## நாடகவிழா

குரும்பசிட்டி, புதன்.

உடுவில்கிராமசபை திறந்த வெளியரங்கில் அடுத்த மாதம் 10-ம் திகதி மாலை இந்து வாலிபர் மகளிர் சங்

சினிமா விமர்சனம்

## ஊட்டிவரை உறவு

மூன்று மணி நேரத்துக்கு 'குளுகுளு' உல்லாச உலகுக்கு அழைத்துச் செல்கிறார், புதுமை டைரக்டர் ஸ்ரீதர்!

சிக்கல்களுடன் ஆரம்பித்து, இளம் சிட்டுகளை காதல் சிட்டுகளாகப் பறக்க வைத்து, மிகமிக நெருங்க வைத்து, அதிலு மோர் புதுமை செய்து, கவர்ச்சி காட்டி, நகைச்சுவை விருந்து தந்து சிக்கல்களை மென்மையாக அவிழ்த்துவிடும் அருமையான படம் தான் 'ஊட்டிவரை உறவு' தந்தையாராக வரும் பாலையாவை ஏமாற்றுவதற்காக காதலிப்பது போல் நடித்து, பின்னர் ஸீரியஸாகவே காதலித்து, ஆற்றங்கரையிலும், புல்வெளியிலும் சிவாஜி விஜயாவுடன் கட்டிப் புரள்கிறார்! கொஞ்சலுக்கும் கெஞ்சலுக்கும் பஞ்சமில்லை!

நடிகர் திலகத்துடன் ஒட்டி உறவாடும் போதும், பாலையா வின் மகளாக நடிக்கும் போதும் விஜயா நடிப்பு உயர்கிறது! நிலைக்கண்ணாடிமுன், உடலை வளைத்து, அங்கமங்கமாக அழகுகாட்டி ''தேடினேன் வந்தது, நாடினேன் தந்தது'' என்று விஜயா பாடி ஆடுவது தனி அழகு! முத்துராமன்-விஜயலஷ்மி ஜோடி காதலித்து கும்மாளம் போடுகிறது!

பாலையா பண்பட்ட நடிகர்! மகனுக்குப் பயந்து நடுங்கி உதறுவதும், அதட்டி உதட்டி நடிப்பதும் அவருக்குத்தான் வரும்.

நாகேஷ் அளவாகப் பேசி அளவாக நடித்திருக்கிறார். டாக்டராக வந்தாலும், துப்பறியவும் செய்கிறார். சச்சு இவர் ஜோடி. வி. கே. ராமசாமியும் நடித்திருக்கிறார்!

'பூமாலையில் ஒரு மல்லிகை', 'புதுநாடகத்தில்... தேடினேன் வந்தது, நாடினேன் தந்தது...' இந்தப் பாட்டுகள் இன்னமும் ரீங்காரமிடுகின்றன

ஸ்ரீதர் படமென்றால் படப்பிடிப்பில் புதுமையை நிச்சயம் எதிர்பார்க்கலாம். காமிராவுக்குள் புகுந்துவிளையாடுபவரல்லவா, அவர்! நடிகர்கள் நடிக்கிறார்கள் என்று சொல்வதைவிட ஸ்ரீதர் அவர்களை நடிக்க வைத்திருக்கிறார் என்று சொல்லலாம்!

மொத்தத்தில் —
ஊட்டிவரை உறவு —
உல்லாச விருந்து!

யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டரில் இப்படம் ஓடிக்கொண்டிருக்கிறது.

--பாமா

ஆட்சிமன்றத்தில் அண்ணாவுக்கு துக்கம் இல்லை

## கண்டனத்தீர்மானத்தை நிராகரித்தார் கி. ச. தலைவர்

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டிக் கிராம சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்றது கிராமசபையின் உப தலைவரும், 2-ம் வட்டார அங்கத்தவருமாகிய திரு. பீ. கே. குலசிங்கம் அண்ணாவின் மறைவுக்குத் தேசிய அரசாங்கம் துக்கம் தெரிவிக்காததைத் கண்டித்து ஒருபிரேரணை கொண்டு வந்தார்.

அப் பிரேரணையில் இச் செய்கை மூலம் தேசிய அரசாங்கம் தமிழ் மக்களை உதாசீனம் செய்துவிட்டதென்றும், ஒரு மாபெரும்தமிழ்த் தலைவனை, அதுவும் எமது அயல் நாட்டு ராஜதந்திரி ஒருவரை அவரின் மறைவுக்கு அஞ்சலிசெய்யாததின் மூலம் தமிழினத்தையே அவமானம் செய்துள்ளது என்று குறிடபிட்டிருந்தார்.

இத் பிரேரணையை நிராக

## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, புதன்

ஊறணி புனித அந்தோனியார் கிராம முன்னேற்றச் சங்கத்தின் சனசமூகநிலைய 19-ம் வருடாந்தக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது

புதுவருட நிர்வாகிகளாக பின் வருபோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் வணபிதா பி. எஸ். மரியதாசன், தலைவர்: தே. யோசெப், உபதலைவர்; வ. சாமுவேல், காரியதரிசி: எம். செல்வராசா, உபகாரியதரிசி: ம. அருள்நாதர், தனாதிகாரி: அலு. தேவதாசன்.

## நீதிமன்றத்தில்

- நமது குரும்பசிட்டி நிருபர் -

### வழக்கில் சமரசம்

சென்றவருடம் ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி தொல்புரம் வாசியான எம். அப்பாத்துரை என்பவர் மாஜி பொலிஸ் சார்ஜன்ட் வீ. கந்தையாவைக் கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்ததாக சங்கானைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது இருபகுதியாரும் வழக்கை இணங்க விருப்பம் தெரிவித்ததால் சமாதானப் பத்திரத்தை அடுத்த மாதம் 4-ம் திகதி சமர்ப்பித்து, மீண்டும் கோர்ட்டில் ஆஜராகும்படி இருவருக்கும் நீதிபதி உத்தரவிட்டார்.

வழக்காளி சார்பில் புறக்டர் கே. குணரத்தினம் ஆஜரானார். எதிரிதரப்பில் அட்வக்கேட் ஸி. பாக்கியநாதன் ஆஜராகியிருந்தார்.

0 0 0

### குற்றத்தை ஒப்புக் கொண்டார்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கே. ஜோர்ஜ் என்பவருக்குச்சொந்தமான கைக்கடிகாரத்தைக் களவாடியதாகக் குற்றஞ்சாட்டி அரியாலை வாசியான வீ. செல்வராசா என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்போது எதிரி களவு போன பொருளை வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்டதால் மற்றையகுற்றச்சாட்டை பொலிஸார் வாபஸ் பெற்றனர். நீதிபதி எதிரியை அடுத்தமாதம் 4ம் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு தண்டனை வழங்குவதை ஒத்திவைத்தார். சங்கானைப் பொலிஸ் தரப்பில் சார்ஜண்ட் லந்தரா வழக்கை நடாத்தினர்.

0 0 0

### எதிரி விடுதலை

சட்டவிரோதமாகசிவில் மெடிக்கல் ஸ்ரோருக்குச் சொந்தமான மருந்துப் பொருட்களும் உபகரணங்களும்வைத்திருந்ததாக அம்பலவாணர் என்ற வயோதிபர்மீது காங்கேசன்துறைப் பொலிஸாரால் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி விடுதலையானார்.

## கிறிஸ் கல்லூரியில் பாட்மின்டன் பயிற்சி

யாழ்ப்பாணம், வியா.

யாழ். மாவட்ட பாட்மின்டன் சங்கம், தமது அங்கத்துவ பாடசாலை மாணவர்களுக்கு, ஒரு பாட்மின்டன் பயிற்சி வகுப்பை கிறிஸ் கல்லூரி மண்டபத்தில் 'தோமஸ் கிண்ண' வீரர் டாக்டர் கே. விஜேந்திரா தலைமையில் நடாத்தி வருகின்றது. அகில இலங்கை பாட்மின்டன் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்வதற்காகவே, தற்போது வீரர்களை, யாழ் மாவட்ட பாட்மின்டன் சங்கம்தெரிவு செய்து வருகின்றது. (தே. நி)

## 3 நாள் பயிற்சி

சித்தங்கேணி, புதன்

வலிகாமம் மேற்குப் பகுதிச் சாரணர் குழுத் தலைவர்களுக்கான பயிற்சி முகாம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் மூன்று தினங்கள் வலி-மேற்கு உதவிச் சாரணர் ஆணையாளர் திரு. சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் வலிகாமம் மேற்குப் பகுதிப் பாடசாலைகள் பங்குபற்றின.

இறுதி நாளன்று சாரணர் முறைகளில் விசேஷ பயிற்சியும், பாசறைத் தீ வைபவமும் இடம்பெற்றன.

## அபராதமும் சிறையும்

ஒரு றாத்தல் பாணை 40 சதம்ாக விற்றதாக குற்றம் சாட்டி திரு. ரி. எம். ரஹ்மானால் தொடரப்பட்ட வழக்கில் ஓமந்தையிலுள்ள ஹோட்டலைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை மரியாம்பிள்ளை என்பவர் குற்றவாளியாகக் காணப்பட்டார். இவருக்கு ஒருமாத கடூழியச் சிறையும் ரூபா 100 அபராதமும் அல்லது மேலும் ஒரு மாதச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

0 0

## ஒருவர் விடுதலை; மற்றவருக்கு அபராதம்

முல்லைத்தீவு, புதன்

ஒரு றாத்தல் பம்பாய் வெங்காயத்தை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க ஏழுசதம் கூட்டிவிற்றதாக முல்லைத்தீவைச்சேர்ந்த வியாபாரிகளான செ. இரத்தினம், செ. பாக்கியநாதன் ஆகிய சகோதரர் இருவர் மீதும், உணவு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் ஜனுப் ரி. எம். ரஹ்மானால் தொடரப்பட்டவழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

MANOHARA
JAFFNA
Daily at 4-45,
7-00, & 9-45 p. m.
Pre Poya Poya 10-30 a. m.
Jeewarani
in
KAPATTI KAMA

REGAL at Jaffna
Daily at 4-45, 7-00 & 9-45, p. m.
Pre-poya, Poya 10-30 a. m.
Dirk Bogarde
in
M. G. M's
OUR MOTHER'S HOUSE

...கழகம் 4-0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு ந. ஜெயராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

வல்வை 'சி' பிரிவு ஹெலியன் விளையாட்டுக்கழகத்திற்கும் கட்டைப்புளியடி 'சி' பிரிவு சிவானந்தா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஹெலியன்ஸ் விளையாட்டுக்கழகம் 4-0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு ந. ஜெயராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
எம். ஜி. ஆர்.
கே. ஆர். விஜயா
நடித்த
விவசாயி

இங்ஸ்லி
பிளாஸா
வெம்பிளி
(கண்டி)
ஸ்ரீகிருஷ்ணா
(திருமலை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மற்றும்
சினிமாஸ் திரைகளில்



சிவாஜிகணேசன்
கே. ஆர். விஜயா
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின் மகோன்னத
ஈஸ்ட்மென்
கலர்ப் படைப்பு



ஊட்டிவரை உறவு
இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்
மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S. S. வாசன்
அவர்களால்
...ம்மன்கலரில் படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

இன்று பிறந்தவர்களுக்கு- விவசாயிகளுக்கு வெற்றிக்குரிய ஆண்டாகும். தானிய விருத்தியும் தனச்சிறப்பும் குடும்பஸ்தர்களுக்கு குதூகல மிகுதியும் பிணி உடையோர் சுகம் அடைவர். பொருள் பிணக்குநீங்கும் புண்ணிய விருப்புகள் தரும் நல்லாண்டாகும்.

மேஷம்- பொருள் வரவு, புகழ்பட வாழ்வீர்.

ரிஷபம்- கண்துடைப்பு வேலை, கவனம் வேண்டும்

மிதுனம்- இணையவரும் துணை எதிர்காலம் அணை.

கடகம்- வாழ்த்தும் உண்டு, வகையுடன் வரும்.

சிம்மம்- கடன் தொல்லை, கவலை மிகுதி.

கன்னி- அன்னையின் ஆதரவு அறவழி நாட்டம்.

துலாம்- பிள்ளைப்பாசம். கொள்ளை இன்பம்

விருச்சிகம்- கெருடப் பார்வை, காத்திருக்கும் பகை.

தனுசு- இல்லறப் இனிக்கும், விருந்தும் உண்டு.

மகரம்- கரும்பாக இனிக்கும், வேம்பாக கைக்கும்.

கும்பம்- தந்தையின் கருணை, தடைகளும் விலகும்.

மீனம்- முயற்சி வெல்லும், முதலிடமுண்டு.

—சோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## நாடகவிழா

குடும்பசிட்டி, புதன்: உடுவில்கிராமசபை திறந்த வெளியரங்கில் அடுத்த மாதம் 10-ம் திகதி மாலை இந்து வாலிபர் மகளிர் சங்கத்தினர் நாடகவிழா ஒன்றினை நடாத்துகின்றனர். இரு சமூக, சரித்திர நாடகங்கள்மேடை ஏற்றப்படும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 27—2—69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு, 6-45 பேச்சு, 7-00 கிராம சஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-20 புதுமொழி படிப்போம், 9-30 தாளவாத்தியக் கச்சேரி, 10-00 நேயர் விருப்பம்.

...எஸ். மரியதாசன், தலைவர்; தே. யோசெப், உபதலைவர்; வ. சாமுவேல், காரியதரிசி: எம். செல்வராசா, உபகாரியதரிசி: ம. அருள்நாதர், தனாதிகாரி: அலு. தேவதாசன்.

ஆறுபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

கோப்பாய், புதன்

புத்தூர் மத்திய சனசமூக நிலைய பொதுக்கூட்டம் திரு பி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றபோது நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எம். திருநாவுக்கரசு. செயலாளர் திரு. எஸ். சிவானந்தமூர்த்தி பொருளாளர்: திரு. பி. பரஞ்சோதி. விளையாட்டுத் தலைவர்: திரு. எஸ்: குமரன் நிர்வாகசபை உறுப்பினர்களாக 9 பேர்தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய் றோமன்கத்தோலிக்க பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைமையாசிரியர் திரு. ஏ. மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. மரியாம்பிள்ளை, உபதலைவர்: திரு. எஸ். கபிரியேற்பிள்ளை, காரியதரிசி: திரு. எம். சே. இளையப்பு, தனாதிகாரி: திரு. ரி. அருமை.

ஆறுபேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

...அயல் நாட்டு ராஜதந்திரி ஒருவரை அவரின் மறைவுக்கு அஞ்சலிசெய்யாததின் மூலம் தமிழினத்தையே அவமானம் செய்துள்ளது என்று குறிடபிட்டிருந்தார்.

இத் பிரேரணையை நிராகரித்த தலைவர் எல்லோரும் இறப்பது சகஜமே யென்றும், ஒவ்வொருவரும் இறக்க அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டிருந்தால் இதற்கு ஒருமுடிவே கிடையாதா? ஆக்க பூர்வமான காரியங்களைச் செய்வதே சிறந்த அஞ்சலியாகும் எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் கிராம சபை அங்கத்தவர்கள் எவரும் அண்ணாவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையைக் கொண்டுவரவில்லை.

## நீர் வழங்கும் திட்டம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், வியா.

நயினாதீவு, புங்குதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களுக்கு நீர் வழங்கல் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவிருக்கின்றது. இப்பகுதிகளிலுள்ள தண்ணீரின் நிலைமையை அண்மையில் வடமாநில பொறியியலாளர் திரு. சி. புவனேஸ்வரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

நயினாதீவு, காளிகோவிலுக்கு அருகாமையில் ஒரு புதிய கிணற்றை அமைத்து அங்கிருந்து நன்னீரை எடுத்து தற்போது நீர் வழங்கும் பகுதிக்கும் மற்றும் சில இடங்களுக்கும் நீர் வழங்கப்படவிருக்கின்றது. இத்திட்டத்தின் ஆய்வு வேலைகளையும் நிர்மாண வேலைகளையும், வடமாநில பொறியியலாளரின் நேரடிப் பார்வையின்கீழ் இயங்கும். (ந. நி.)

சாட்சியம் முரண்:

## எதிரி விடுதலை

வல்வெட்டித்துறை, புதன்

புலோலி பேற்றைகச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த முருகேசு மூத்தநாச்சிப்பிள்ளை என்பவரை தாக்கியதாக பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் முரண்பட்ட சாட்சியங்கள் காரணமாக எதிரியை விடுதலைசெய்தார்.

...பொருட்களும் உபகரணங்களும்வைத்திருந்ததாக அம்பலவாணர் என்ற வயோதிபர் மீது காங்கேசன்துறைப் பொலிஸாரால் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி விடுதலையானார்.

0 0 0

## பிரேத ஊர்வல துப்பாக்கிப் பிரயோகம்

சங்கானை பிரேத ஊர்வல துப்பாக்கிப் பிரயோக வழக்கு மேல்விசாரணையை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் அடுத்தமாதம் 12-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

...பாட்டுப் பரிசோதகர் ஜனாப் ரி. எம். ரஹ்மானுல் தொடரப்பட்டவழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

முதலாம்எதிரி சுற்றவாளியாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். இரண்டாம் எதிரியான பாக்கியநாதனை குற்றவாளியாகக் கண்டு ஆறுவார கடூழிய சிறைத் தண்டனையும், 250ரூபா அபராதம் அல்லது மேலும் ஆறுவாரகடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

ரவி என்றால் ...
... "சரி"



ரவி பிரஷ்களுள் நிலையான பெயர்.
உறுதியற்ற சிலிர்க்கும் முடிகள்
சுவர்களைக் களங்கப் படுத்தும் கோடுகள்
நிந்தையை விணடித்தல்
இவை ரவி பிரஷ்களில் இல்லை.

ரவி பிரஷ் வாங்கும் போது நீங்கள் பூரண நம்பிக்கை அடையலாம். காரணம் ரவி தீந்தை பிரஷ்கள் இறக்குமதி செய்யப்பட்ட சுத்தமான முடிகளைக் கொண்டு செய்து அவற்றின் தரமும் நீண்ட சேவையும் உறுதிப்படுத்தும் விதம் பரிசோதிக்கப் படுகின்றன.

நீங்கள் அடுத்த முறை தீந்தை பிரஷ்கள் வாங்கும் போது பிடியில் ரவி என்ற பெயர் இருக்கிறதா எனப்பார்த்து வாங்குங்கள்.
அதுவே தரத்தின் உத்தரவாதம்.

சகல தேவைக்கும் ஒரு ரவி பிரஷ் உண்டு.

இவற்றின் வகைகளைக் காண்பிக்க உங்கள் வியாபாரியைக் கேளுங்கள்.
ரவி இன்டஸ்றீஸ் லிமிடெட்
RI-2-68-MASTERS

தம்பி அன் கோ.
வண்ணார்பண்ணையில்
ரூ. 10000/- தொடக்கம் ரூ. 30000/- வரை
சீதன சேமிப்புக்கு
வருடம் 12 சத வீதம் வட்டி
கொடுக்கப்படும்.
ஒவ்வொரு வருடமும் வட்டி எடுக்கலாம்.
குறிப்பு:-
இப் பணத்தை 30 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக். அரசியல் கொந்தளிப்பு அடங்கும் அறிகுறி

# எதிர்க்கட்சித் தலைவர்களுடன் அயூப் ஆலோசனை ஆரம்பம்

## பூட்டோ மட்டும் ஒதுங்கிநிற்கிறார்

ராவல்பிண்டி, பெப். 26

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் அதிபர் அயூப்கான்இன்று காலையில பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கின்றார்.

ஜனநாயக செயல்கமிட்டியில் அமைப்பாளர் நவாப்சாதா நஸருல்லாகானி அதிபர் அயூப்கானுடன் தொடர்புகொண்டதையடுத்து ஆலோசனைக் கூட்டத்துக்கான இடமும், நேரமும் முடிவுசெய்யப்பட்டது.

பாகிஸ்தானின் எதிர்கால அரசியல் நிலைமைபற்றி இந்தக் கூட்டத்தில்ஆலோசனைகள் நடத்தப்படும்.

ஜனநாயக செயல்கமிட்டியில் அங்கம்வகிக்கும்எல்லா எட்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்கள். கி. பாகிஸ்தான் அவாமிக் கட்சியின் தலைவர் சேக் முஜிபு ரகுமான் இதில் முக்கியமானவர்.

ஜனநாயக செயல்கமிட்டியில் அங்கம் வகிக்காத முக்கிய தலைவர்களான எயார் மார்ஷல் அஸ்ஹர் கான் லெப்டினட் ஜெனரல் ஆஸம்கான், கிழக்குப் பாகிஸ்தான் முன்னாள் நீதிபதி முஷத் ஆகியவர்களும்இந்த ஆலோசனைகளில் கலந்துகொள்ள இணங்கியுள்ளனர்.

மக்கள் கட்சியின் தலைவரும் முன்னாள் வெளிநாட்டமைச்சருமான திரு. சுல்பிகார் அலிபூட்டோ மாத்திரம் இன்னும் இந்த ஆலோசனைகளில் கலந்துகொள்வதுபற்றி முடிவுதெரிவிக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர்கள் மத்தியில் ஒருமித்த கருத்து ஏற்படும் பட்சத்தில்தான் இப்பேச்சுகளில் கலந்துகொள்ள இயலும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 16 வாரங்களாக பாகிஸ்தானில் நிலவிவரும் கலவரங்களுக்கு இந்த மாநாடு ஒரு முடிவு ஏற்படுத்தும் என்றும் பாகிஸ்தானின் எதிர்கால அரசியல் முன்னேற்றத்துக்கு வழிவகுக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரையில் பாகிஸ்தானில் இடம்பெற்ற கலவரங்களிலும் பொலிஸாரும் ராணுவத்தினரும் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலும் சுமார் 100 பேர் மரணமாகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## பீகாரில் காங்கிரஸ் கூட்டணிமந்திரிசபை

புதுடில்லி, பெப். 26

பீகாரில் காங்கிரஸ் கட்சியினரின் தலைமையிலான கூட்டணிமந்திரிசபை இன்று பதவி ஏற்கவிருக்கின்றது. காங்கிரஸ் கட்சியின் சட்டசபை குழுத் தலைவர் திரு. ஹரிஹர்சிங் முதலமைச்சராகப் பதவி ஏற்றுக்கொள்வார்.

தாம் மந்திரிசபை அமைப்பதற்கு 162 பேர் சாதகமாக இருப்பதாக திரு. ஹரிஹர்சிங் பீகார் கவர்னரிடம் பெயர் பட்டியல் ஒன்றினைச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து மந்திரிசபை அமைக்கும்படி அவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார். 318 அங்கத்தவர்களைக் கொண்ட சட்டசபையில் காங்கிரஸ் கூட்டணி 168 பேர் இருக்கின்றனர்.

இன்றுபிற்பகல் 4 மணிக்கு பீகார் மந்திரிசபை பதவி ஏற்றுக்கொள்ளும்.

## ஐரோப்பிய பாதுகாப்பில் பிரிட்டன் அதிக கவனம்

## மேலும் ஒரு செக். மாணவர் தற்கொலை

பிராக், பெப். 26

செக்கோஸ்லாவாக்கியாவில் மேலும் ஒரு பள்ளிமாணவன் தமக்குதாமே தீமூட்டித் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

அவர் விட்டுச் சென்றுள்ள ஒரு கடிதத்தில் செக்கோஸ்லாவாக்கியாவில்அண்மையில் தற்கொலை புரிந்துகொண்ட யங்பாலாக் என்ற மாணவனின் கூட்டத்தைச் சேர்ந்தவர் தாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

சோவியத் ஆக்கிரமிப்பை எதிர்த்தும் பத்திரிகைக் கட்டுப்பாட்டை எதிர்த்தும் இந்த இளைஞர்கள் இவ்வாறு தற்கொலைசெய்துகொள்கிறார்கள்.

## நிக்ஸன் கி. ஜெர்மன் புற பட்டார்

லண்டன், பெப். 26

அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் லண்டனில் பிரிட்...

இந்தி செய்தி நேரமாற்றம்

## எழுத்துமூலம் ஆட்சேபம் தெரிவிக்கப்படுமாம்

### கருணாநிதி விளக்கம்

கோவை பெப். 26

திரு. கருணாநிதி முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின்னர் முதல் தடவையாகக் கோவைக்குச் சென்றிருந்த பொழுது ஜவுளி தொழிலுக்கு கலால் வரி நிவாரணமளிக்க மத்திய அரசு முன்வரவேண்டுமெனவும் மாநில அரசு ஜவுளித் தொழிலுக்கு விற்பனை வரி, மின்சார கட்டணம் ஆகியவற்றில்சலுகைகள் அளிக்கத் தயாராக இருக்கிறதெனவும் தெரிவித்து மூடப்பட்ட மில்களை மீண்டும் ஆரம்பிக்க ராஜ்ய ஜவுளி கூட்டுத்தாபனம் ஒன்றைத் தொடங்க தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார். இதற்கு மத்திய அரசின் தேசிய ஜவுளி கூட்டுத்தாபனத்தின் உதவி தேவையெனவும் வரவு செலவுத்திட்ட விவாதம் முடிந்த பின்னர் இவ்விடயம் பற்றி மில் அதிபர்கள் தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியவர்களை இது குறித்துத் தான் சந்திக்கவிருப்பதாகவும் கூறினார். விரைவில் சென்னையில் நடக்கவிருக்கும் மகாநாட்டில் ஜவுளிசம்பந்தப்பட்ட சகல பிரச்னைகளையும் ஆராய்வதாக முதல் மந்திரி உறுதி தெரிவித்தார்.

கோவை விஜயத்தின் போது விவசாயக் கல்லூரி மாணவர்களிடையே உரையாற்றிய தமிழக முதல்வர் ராஜ்ய அரசுமாணவர்களின் சட்டபூர்வமான உரிமைகளுக்காகப் போராடும்இந்த நம்பிக்கையில் மாணவர்கள் கல்லூரியில் கவனம் செலுத்தவேண்டும் எனக்கூறி விவசாயத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப்பேசினார். இக்கல்லூரியில் ரூபா 3 லட்சம் செலவில் கட்டப்பட்ட அண்ணாதுரை மண்டபத்தையும் முதல்வர் திறந்துவைத்தார்.

கோவையில்தனது கட்சிக்காரர்கள் கூட்டத்தில் திரு. கருணாநிதி பேசுகை...

## குஜராத்தில் மரணதண்டனை ஒத்திவைப்பு

ஆமதாபாத், பெப். 26

இந்திய நூற்றாண்டு விழா இந்த ஆண்டில் கொண்டாடப்பட விருப்பதையொட்டி குஜராத்தில் தூக்குத்தண்டனைகளை ஒத்திவைக்கமுடிவு செய்யப் பட்டிருக்கின்றது.

மரணதண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

## கருணாநிதி தந்த 'போதை'

சென்னை, பெப்.26

கடந்த திங்கட்கிழமை தமிழக மேல்சபையில் முஸ்லிம்லீக்அங்கத்தவர் திரு. அப்துல்வஹாப் பேசுகையில், மதுவிலக்கு சம்பந்தமாகமுதலமைச்சர் திரு. கருணாநிதி அறிவித்துள்ளகொள்கைதிருப்தியளிப்பதாய் இல்லையென்றும், மதுவிலக்குக் கொள்கை தொடர்ந்து செயல் படுத்தப்படுமா என்று கேட்கப்பட்ட போது 'இப்போதைக்கு மாற்றுதல் இல்லை' என்று முதல்வர் கூறியிருக்கிறார். இப்போதைக்கு இல்... இக்... என்... திரு. வஹாப்கேட்... முதலமைச்சர்

"அண்ணா பிற்போக்குவாதியா"

## எஸ். டிக்கு கடிதம்

அளவெட்டி, புதன்

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றம் எஸ். டி. பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் அண்ணாவுக்கு ஆட்சிமன்றத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற பிரச்னை எழுந்தபோது "அண்ணாவின் மறைவு பிற்போக்கு வாதிகளுக்குத்தான் பேரிழப்பு அவருக்கு அனுதாபம் தெரிவிக்கவேண்டியதில்லை. தி. மு. க. ஒரு பிற்போக்குக் கட்சி" என்று கூறித் தாங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளீர்கள். திரு. ஆர். ஜி. சேனநாயகா எதிர்ப்புத் தெரிவித்ததில், பொருளியல் கலாநிதி திரு. என். எம். பெரேரா எதிர்ப்புத் தெரிவித்ததில் கம்யூனிஸ்ட் கட்சி கெனமன் எதிர்ப்புத் தெரிவித்ததில் ஆச்சரியமில்லை. ஆனால் நீங்களும் அந்த வரிசையிலே சேர்ந்து நின்று எதிர்த்ததோடு மட்டுமல்ல அண்ணாவைப் பிற்போக்குவாதி எனக் கூறியமை தமிழர்களாகிய எம்மைப் பெரிதும் புண்படுத்துகிறது." என்று தெரிவித்துள்ளது.

## அஞ்சலி

சித்தங்கேணி, புதன்

"அண்ணா அண்ணா என்று லட்சோபலட்சம் தம்பிகள் அன்பொழுக அழைத்த அறிஞர், தமது நாவன்மையாலும், கைத்திறனாலும் தமிழ்த் தாய்க்குப் புதுப்புது ஆடை அணிகலன்களை அணிவித்து தனக்கெனத் தனியிடம் பெற்றுக் கொண்ட மேதை. அவரின் பிரிவால் நடுக்கடலில் மாலுமியை இழந்த கப்பல்போல் உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஏங்கிக் கிடக்கிறார்கள்" என வட்டு-கிழக்கு இந்து வாலிபர் வளர்ச்சிக்கழகம் அஞ்சலி செலுத்திய கூட்டத்தில் பேசிய திரு. அ. துரைமைந்தன் கூறினார். இக்கூட்டம் திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

0 0 0

## புத்தூர் கி. ச. அஞ்சலி

அளவெட்டி, புதன்

புத்தூர் கிராமசபைக் கூட்டத்தில் அமரர் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

புத்தூர் கிராமசபைத் தலைவர் திரு. நடராசா

## "உள்ளூர்க்கலைஞர்களின் வளர்ச்சிக்க கஉழைத்தவர்"

### காலஞ்சென்ற இசைக்கலைஞருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், வியா

"உள்ளூர்க் கலைஞர்களுக்கு ஆக்கம் கொடுத்து அவர்களை வளர்க்கவேண்டுமென்ற அவாக்கொண்டவர் காலஞ்சென்ற திரு. நமசிவாயம். இதன் அறுவடைதான் அவரால் நிறுவப்பட்ட அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம். தமிழிசையில் நீச்சலாடி வெற்றி பெற்ற திரு. நமசிவாயத்தின் கனவுகள் நனவாக, அவரது மாணவர்கள் விட்டுச் சென்ற பாதையைப் பின்தொடரவேண்டும்."

காலஞ்சென்ற சங்கீதபூஷணம் ஆ. நமசிவாயத்தின் மறைவு குறித்து நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பேசிய கலையரசு க. சொர்ணலிங்கம் இவ்வாறுதெரிவித்தார்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தாலும், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தாலும் நடாத்தப்பட்ட இவ்வனுதாபக்கூட்டத்துக்கு திரு. என். செல்வநாயகம் தலைமைவகித்தார். உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் இறந்த பின்னரே கலைஞர்கள் போற்றி மதிக்கப்படுவது என்ற நிலை மாறி அவர்கள் வாழும்போதே மக்கள் அவர்களை மதிக்கும் நிலை ஏற்படவேண்டும் என்றார்.

ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம், திரு. இ. நாகலிங்கம், திரு. மூர்த்தி ஐயர், சொக்கன், என். சண்முகரத்தினம், கே. செல்வரத்தினம், வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதன், என். ரி. செல்லத்துரை, கே. குமாரசாமி ஆகியோர் உட்பட இன்னும் பலர் பேசினர். இரண்டுநிமிட மௌனமும் கூட்டத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. (கா. நி)

## ஒலிபரப்பில் நீருயிரியல் ஆராய்ச்சி

பருத்தித்துறை, வியா

தொண்டைமானாறு நீர்த்தேக்கத்தில் நடாத்தப்படும் நீருயிர் ஆராய்ச்சி பற்றிய கலந்துரையாடல் இம்மாதம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தாரால் நாளை பிற்பகல் 7-30 மணிக்கு ஒலிபரப்பப்படவிருக்கிறது. இக்கலந்துரையாடலில் இலங்கை நீர்வளச் சபை ஆலோசகர் திரு. எஸ். ஆறுமுகம், கல்வி வெளியீட்டுப் பகுதி அமைப்பாளர் திரு. வீ. கே. நல்லையா, திரு. கே. எஸ். குகதாசன், திரு. கே. செல்வவிநாயகம் ஆகியோர் பங்குபற்றுவர்.

## கலை விஞ்ஞான பொருட்காட்சி

இமையாணன் புதன்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 4-ம்5-ம் 6-ம் திகதிகளில் "கலை கைப்பணி, விஞ்ஞான பொருட்காட்சி" நடைபெறவிருக்கிறது. இக் கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் நடத்தும் இப் பொருட்காட்சியில், விஞ்ஞானம், சுகாதாரம், உயிரியல், புவியியல், கமத்தொழில், கைப்பணி கைத்தொழில் கலை சாரணீயம் சித்திரம் சம்பந்தமான பொருட்கள் காட்சிகுவைக்கப்படவிருக்கிறது. அத்துடன் மாலை வேளைகளில் உடல் பயிற்சி விளையாட்டுகளும் படக்காட்சிகளும்

## மூவருக்கு வேலை நீக்க அறிவித்தல்

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்ற ஊழியர்களான எம். செல்லத்துரை வி. நாகன் என்பவர்களுக்கும், நீதிமன்ற ஊழியரான என். கனகசிங்கம்என்பவருக்கும் சிங்களத் தகுதிப் பரீட்சையில் தேர்ச்சியடையாத காரணத்தால் நீதியமைச்சு வேலைநீக்க அறிவித்தலை அனுப்பி வைத்திருக்கிறது. இதனை எதிர்த்து இவர்கள் மூவரும் அப்பீல் செய்கின்றனர்.

## பாதை தடையாகிறது

சித்தங்கேணி, புதன்

சங்கரத்தை - நவாலி வீதியால் பிரயாணம் செய்பவர்கள் நிலை மிகவும் கஷ்டமாக உள்ளது. இப்பகுதியிலிருக்கும் வழுக்கி ஆற்றுப் படுக்கையின் அருகில் கழிவுப் பொருட்களான பீங்கான், தகரம், சிகையலங்கார நிலையங்களின் கழிவுப்பொருட்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்கு 162 பேர் சாதக பிகார் மந்திரிசபை பதவி மாக இருப்பதாக திரு. ஹரி ஏற்றுக்கொள்ளும்.

## ஐரோப்பிய பாதுகாப்பில் பிரிட்டன் அதிக கவனம்

லண்டன், பெப். 26

பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி திரு. டெனிஸ் ஹீலே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் புதிய பாதுகாப்பு வரவு-செலவுத்திட்டத்தை அறிவித்தார்.

2,266,000,000 பவுண்டுகளுக்கான இந்தப் புதிய பட்ஜட்டின் கீழ் மேற்கு ஐரோப்பிய பாதுகாப்பில் பிரிட்டனின் பங்கு பிரதானமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

பிரிட்டனின் ராணுவ வலிமை பற்றியும், ஐரோப்பிய பந்தோபஸ்தில் அதன் பங்கு பற்றியும் விபரித்த பிரிட்டிஷ் மந்திரி கீழ்க்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

நேட்டோ அணியின் பிரதான முன்முனைகளிலும் கடல், தரை, ஆகாய மார்க்கமாக ராணுவ வல்லமை படைத்த ஒரேயொரு வல்லரசாகத்திகழ்வது பிரிட்டன்.

ஐரோப்பாவிலுள்ள மேற்கத்தைய கடற்படைகளில் மிகவும் பலம்வாய்ந்தது பிரிட்டிஷ் கடற்படையாகும்

ரைனிலுள்ள பிரிட்டிஷ் ராணுவமும் ஜெர்மனியிலுள்ள ராயல் விமானப் படையுமாக ஐரோப்பாவில்லுள்ள 60,000 பிரிட்டிஷ் துருப்புகள் ஐரோப்பிய ராணுவ பந்தோபஸ்துக்கு ஒரு உத்தரவாதமாக விளங்குகின்றன.

ஐரோப்பியகேந்திர அணுவாயுத படையிலும் பிரிட்டன் பிரதான பங்குவகிக்கிறது. பிரிட்டனின் சக்திவாய்ந்த புதிய போலாரிஸ் நீர்மூழ்கிக் கப்பற்படை இதற்குச் சான்று.

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் இந்த ராணுவ வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேசுகையில், கிழக்கில் படைபலத்தைக் குறைக்கத் தீர்மானித்திருப்பது காரணமாக ஐரோப்பிய பாதுகாப்பில் பிரிட்டன் தனது பங்கைப் படிப்படியாகப் பலப்படுத்த முடிந்தது என்று குறிப்பிட்டார். சூயஸுக்கு கிழக்கே ராணுவ தளங்களை வாபஸ் பெறுவதால் பிரிட்டன் தனது ராணுவ பட்ஜட்டை குறைக்க முடிந்திருக்கிறது என்றார் அவர். புதிய பட்ஜட்டில் சென்ற ஆண்டு பட்ஜட்டையும் விட 5,000,000 பவுண்கள் குறைந்திருப்பதாக அவர் கூறினார்.

சூயஸுக்கு கிழக்கிலிருந்து பிரிட்டிஷ் தளங்கள் வாபஸாவதை அடுத்து இப்பிராந்தியங்களில் ராணுவ பந்தோபஸ்துக்கு புதிய ஒழுங்குகளைத் திட்டமிடுவதில் பிரிட்டன் முனைந்துவருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## க. ஜெர்மனிக்கு புறப்பட்டார்

லண்டன், பெப். 26

அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனுடன் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு கிழக்கு ஜெர்மனிக்குப் புறப்பட்டார்.

பிரிட்டிஷ் பிரதமரோடும் மந்திரிசபையோடும் திரு. நிக்ஸன் புறப்படுவதற்கு முன் 'இறுதியாக ஒரு மணி நேரம் ஆலோசனைகள் நடத்தினர். மேற்காசிய நிலைமை போன்ற உலகப் பிரச்னைகள் பற்றியும், பிரிட்டனுக்கும்பிரான்சுக்குமிடையில் ஏற்பட்டுள்ள பிணக்குகள் பற்றியும் அவர்கள் ஆலோசனைகள் நடத்தியதாகத் தெரிகின்றது.

## மாதக்கணக்கில் மயங்கிக் கிடந்த சிறுவன்

கார்ல்ஸ்ரு (டாட்) பெப் 26

கார்விபத்தில் சிக்கிய பீட்டர் ஒட் என்னும்9வயது சிறுவன் இங்கு மருத்துவமனையில் மாதக் கணக்கில் மயங்கிய நிலையில் இருந்தான். டச்சு நாட்டில் தயாரான புதிய மருந்தை சிறுவனுக்கு ஜெர்மன் டாக்டர் உறுமான் செலுத்தினர் சில வாரங்களில் சிறுவனுக்கு சுயநினைவு திரும்பியது. இப்போது நடக்கவும் பேசவும் பையன் பயிற்சி பெறுகிறன்.

மாற்றல் இல்லை' என்று முதல்வர் கூறியிருக்கிறர். இப்போதைக்கு இல்லையென்றல் பிறகு இக்கொள்கை மாறுமா என்று திரு. வஹாப்கேட்டார். முதலமைச்சர் குறுக்கிட்டு 'இப்போதைக்கு' என்றிருப்பதை இப்'போதை'க்கு என்று மாற்றிக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். சபையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

## தமிழில் கட்டியம்

சென்னை, பெப். 26

தமிழ்நாடு கீழ்சட்டசபையில் சபாநாயகர் வருகையில் ஆங்கிலத்தில் நடைபெற்றுவந்த கட்டியம்கூறல் இப்பொழுது தமிழில் நடைபெறுகின்றது.

சபாநாயகர் வரும்போது 'மாண்புமிக பேரவைத்தலைவர் அவர்கள்' என்றுசபைக் காவலர் அறிவிககிறர். சபாநாயகரைப்பாராட்டி திரு. மா. பொ. சிவஞானம்தெரிவித்தயோசனையின்பேரில் இப்படிதமிழில் கட்டியம் கூறப்படுகின்றது.

## கமலாவுக்குபரிசு

புதுடில்லி, பெப். 26

பிரபல தமிழ்நாடு பரத நாட்டிய நர்த்தகி திருமதி கமலாவுக்கு நாட்டியத்துக்கான அகாடமி பரிசு வழங்கப்பட்டுள்ளது. இந்தபரிசை நேற்று பாரத உபஜனுதிபதி திரு. வி. வி. கிரி வழங்கினர். ஆலத்தூர் ஸ்ரீநிவாச ஐயருக்கும் கர்நாடக வாய்ப்பாட்டுக்காக இப்பரிசு வழங்கப் பட்டது.

## உ. பிரதேசில் காங்கிரஸ் மந்திரிசபை

புதுடில்லி, பெப். 26

உத்தர பிரதேசில் திரு. குப்தா தலைமையிலான காங்கிரஸ் மந்திரிசபை இன்று காலையில் பதவியேற்றுக் கொண்டது.

உத்தரபிரதேசில் 225 ஸ்தானங்களில் காங்கிரஸ் 209 இடங்களைப் பிடித்திருக்கிறது. ஏழு சுயேச்சைகள் காங்கிரஸை ஆதரிக்கிறர்கள்.

## தமிழ்நாடு நகரசபைத் தேர்தல்

சென்னை, பெப். 26

தமிழ்நாட்டில் நகரசபைத் தேர்தல்கள் ஏப்ரல்மாதம் இரண்டு கட்டங்களில் நடைபெறும். முதல்கட்டம் ஏப்ரல் 24ம் திகதியும், இரண்டாம் கட்டம் 26ந் திகதியும் நடைபெறும்.

பட்ட அண்ணதுரை மண்டபத்தையும் முதல்வர் திறந்துவைத்தார்.

கோவையில்தனது கட்சிக்காரர்கள் கூட்டத்தில் திரு. கருணநிதி பேசுகையில் கோவையிலுள்ள தி. மு. க. வினர் தம்மிடையேயுள்ள பூசல்களை விடுத்து பழைய மன கசப்புகளையெல்லாம் மறந்து ஒன்றுபட்டு புதிய அரசை ஆதரிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அண்ண இப்பூசல்கள், ராஜ்யத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை ஆகியன குறித்து வேதனையுற்றிருந்தார் எனவும் அவரின் நோய்க்கு இதுவும் ஒரு காரணமாகலாம் எனத் தெரிவித்த முதலமைச்சர் அண்ணவைப்போல் சுயபலத்தில் நிற்கும் திறன் தனக்கில்லையாதலால் தனக்கு எல்லோரும் ஆதரவளித்துத் தனது ஆசையைப் பலப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கோவையில் பத்திரிகை நிருபர்கள் வானெலியில் செய்தி ஒலிபரப்பு நேரத்தில் செய்யப்பட்டுள்ள மாறுதல்கள் குறித்து தமிழக அரசிடமிருந்து அதிகாரபூர்வமான ஆட்சேபம் எதுவும் வரவில்லையென மத்திய தகவல் ஒலிபரப்பு மந்திரி தெரிவித்துள்ளது பற்றி முதலமைச்சரைக் கேட்டபொழுது தமிழக தகவல் மந்திரி இதுகுறித்து மத்திய தகவல் மந்திரிக்கு ஹைதராபாத்தில் எடுத்துரைத்துள்ளார் எனவும் அதிகாரபூர்வமாகச் செய்யவில்லையெனில் எழுத்துமூலம் ஆட்சேபம் செய்வதாகவும் தெரிவித்தார்.

உணவுப் பிரச்னை பற்றி குறிப்பிடுகையில் உணவு நெருக்கடி தீரும்வரை தற்போதைய உணவுக்கொள்கையில் எதுவிதமாற்றமும் செய்வதற்கில்லையெனவும் இக்கொள்கையே நீடிக்குமெனவும் அதன்பின்னரே என்னசெய்வது என ஆலோசிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## எஸ். ஜே. வி. கோரிக்கை

குரும்பசிட்டி, புதன்

காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மயிலிட்டி கிராமசபையின்வருத்தலைவிளான்-சட்டம்பியார் தெருவைச் செப்பனிட விசேஷ நன்கொடைப்பணம் கிராமசபைக்கு வழங்குமாறு உள்ளூராட்சி மந்திரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புத்தூர் கிராமசபைக் கூட்டத்தில் அமரர் அண்ணவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

புத்தூர் கிராமசபைத் தலைவர் திரு. நடராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி சபைக் கூட்டத்தில் அமரரான தமிழக முதல்வர் அண்ணவுக்கு அஞ்சலி தெரிவிக்கப்பட்டதுடன் ஓர் அனுதாபச் செய்தியை அவரின் மனைவி ராணி அண்ணதுரைக்கு அனுப்பி வைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## ஆண்டு விழா

குரும்பசிட்டி, புதன்

தெல்லிப்பளை முற்போக்கு ஐக்கிய வாலிபர் கழக 5வது ஆண்டு விழா திரு. ஈ. கந்தசாமி தலைமையில் அடுத்த மாதம் 1-ம் திகதி தெல்லிப்பளை புதிய அரசினர் வைத்தியசாலை முன்றலில் நடைபெறும். காங்கேசன்துறை எம். பி. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, செனட்டர் எஸ். நடராஜா, யாழ். மாநகரசபை மேயர் திரு. எஸ். நாகராஜா உட்பட மற்றும் பலர் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

## கைவிரல் அடையாளம்பதிவு

யாழ்ப்பாணம், வியா.

குருநகரைச் சேர்ந்த ச. இராசேந்திரம், ந. செல்வம் ஆகிய இருவரும் அகத்தீன் அல்பேட் என்பவருடைய 12 வலைகளை கடலில் களவாடியதாக கரையூர்ப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மஜிஸ்திரேட் ஜனுப் ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பில் புறக்டர் திரு. ஏ. அன்ரனியும், எதிரிகள் சார்பில் புறக்டர் வி. நடராசாவும் ஆஜரானுர்கள்.

எதிரிகள் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்து கொண்டு அடுத்த மாதம் 12-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ந. நி.)

## அபராதம்

வல்வெட்டித்துறை, புதன்

கம்பர்மலையைச் சேர்ந்த வேலன் பெண் தங்கம்மா 7 போத்தல் கள்ளும், வீமன் வள்ளி 5 போத்தல் கள்ளும் வைத்திருந்த குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசாவால் முறையே ரூபா 30, 20 அபராதம் விதிக்கப் பட்டது.

யம் சித்திரம் சம்பந்தமான பொருட்கள் காட்சிகுவைக்கப்படவிருக்கிறது. அத்துடன் மாலை வேளைகளில் உடல் பயிற்சி விளையாட்டுகளும் படக்காட்சிகளும் காண்பிக்கப்படும்.

முதலாவது நாள் நிகழ்ச்சிகளை வட மாநில வித்தியாபதி திரு தனிகாசலமும் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளை உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினரும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரமும் மூன்ருவது நாள் நிகழ்ச்சிகளை வடமாநில விஞ்ஞான பரிசோதகரான திரு. எம். அற்புதநாதனும் ஆரம்பித்துவைப்பார்கள்.

உள்ளது. இப்பகுதியிலிருக்கும் வழுக்கி ஆற்றுப் படுக்கையின் அருகில் கழிவுப் பொருட்களான பீங்கான், தகரம், சிகையலங்கார நிலையங்களின் கழிவுப்பொருட்கள் முதலியன குவிக்கப்படுவதால் பிரயாணஞ்செய்யும் பாதசாரிகளும் வாகனங்களும் கஷ்டமடைவதோடு அயலிலுள்ள வயல்களிலும் நெல் அறுவடையைத் தாமதிக்கச்செய்கிறதாம். இது சம்பந்தமாகச் சங்கரத்தை கிராமமுன்னேற்றச்சங்கமும் வட்டுக்கோட்டை கிராமசபையிடம் புகார் செய்திருந்தது.




# வாரியாருக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்படும்

## தமிழ்நாடு சட்டசபையில் முதலமைச்சர் உறுதி

சென்னை, பெப். 26

நெய்வேலியில் திரு. கிருபானந்தவாரியார் தாக்கப்பட்டது குறித்து தமிழ்நாடு சட்டசபையில் பலஅங்கத்தவர்கள் கவலைதெரிவித்தார்கள். காங்கிரஸ் கட்சியின் கொறடா திரு கே. விநாயகமும், திரு. ம. பொ. சிவஞானமும் கண்டித்துப் பேசினர்கள்.

வாரியாருக்கு தக்க பாதுகாப்புக் கொடுத்து சட்டம் ஒழுங்கைக் காத்திருக்க வேண்டிய பொலிஸார் அதைச் செய்யாமல் அங்கிருந்து அவரை வெளியேறச் சொல்லியிருக்கிறர்கள் என்று திரு. விநாயகம் கண்டித்தார். ஒரு பொது வேதாந்தக் கருத்தைத் தான் வாரியார் கூறியிருக்கிறர் என்றும் அதற்காக சமூகவிரோதக் காரர்கள் வன்முறையில் இறங்கியிருக்கிறர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் திரு. கருணநிதி விவாதத்தில் குறுக்கிட்டு நெய்வேலி சம்பவத்தை விளக்கினர்.

நெய்வேலியில் திரு. அண்ணதுரையைக் குறிப்பிட்டு அவர் கூறிய வார்த்தைகள் ஏற்கனவேயே அண்ணவின் பேரிழப்பினல் மிகவும் மனம் நொந்து போயிருந்த லட்சசோப லட்சம் மக்களின் மனதைப் புண்படுத்தியதால் அங்குள்ள மக்கள் தம் கோபத்தையும் வெறுப்பையும்தெரிவித்திருக்கிறர்கள் என்றர் முதல்வர்.

பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தாதது குறித்து அவர் குறிப்பிடுகையில் வாரியார் அப்படிப் பேசுவார் என்று பொலிஸார் முன்கூட்டியே எதிர்பார்க்கவில்லையென்றர். வாரியார் தமது புராண இதிகாச உபதேசங்களில் அரசியல் கேலி கிண்டல் சேர்த்துப் பேசுவதை வழக்கமாகக் கொண்டவர் என்பதையும் திரு கருணநிதி சுட்டிக் காட்டினர். திரு கருணநிதி மேலும் குறிப்பிட்டதாவது:

வாரியார் அவ்வாறு பேசுவது பற்றி நாங்கள் கவலைப்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

வீரம் உடலின்இயல்பு அல்ல. அது ஆத்மாவின் இயல்பு ஆகும்.

-மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 16-ந் திகதி
(27 - 2 - 69)


## தேர்தலும் தமிழ்மக்களும்

அடுத்த பொதுத் தேர்தல் எந்நேரமும் நடைபெறலாமென்றும் இதற்குத் தயாராக இருக்கும் படியும் ஐக்கிய தேசியக்கட்சியின் மகாநாட்டில் அதன் தலைவரான பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அறிவிப்புக்கொடுத்ததைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியினர் மட்டுமல்ல சகல அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்துள்ளன. ஒரு தேர்தல்முடிந்தவுடனேயே அடுத்த தேர்தல் எப்போது வரும் என்று தேர்தலைப் பற்றியும், பதவியைப் பற்றியும் எந்நேரமும் ஆவல் கொண்டிருக்கும் நம்நாட்டு அரசியல் வாதிகள், தேர்தலுக்குத் தயாராகுங்கள் என்ற அறிவிப்பு வெளிவந்ததும் சும்மா இருப்பார்களா?

தேர்தலில் தங்களுக்குத்தான் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையில்தான் ஒவ்வொரு அபேட்சகரும் போட்டிக்கு நிற்கிறார்கள். இலங்கையைப் பொறுத்தவரையில் பெரும் பான்மைச் சமூகத்தவரின் கட்சிகள் தான் ஆட்சிபீடத்தில் அமர முடியும். இந்த வகையில் ஐக்கியதேசியக் கட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி லங்கா சமசமாஜ, கம்யூனிஸ்ட் (மாஸ்கோ சார்பு) கட்சிகள் இணைந்த) எதிர்க்கட்சிக் கூட்டணிதான் ஆட்சிக்கு வர முடியும். இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினர் குறிப்பாக தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த இருகட்சிகளின் கொள்கைகளிலும் நடவடிக்கைகளிலும் அதிகவித்தியாசமில்லை. சில தீவிரவாதிகள்கிளப்பும் வகுப்புவாத பிரசாரத்துக்கு இந்த இருபெரும் கட்சிகளும் கூட பதவிப்போட்டிக்காக வளைந்து கொடுப்பதுண்டு. கடந்தகால நிகழ்ச்சிகள் இதற்குச் சான்று.

அடுத்த பொதுத் தேர்தல் விரைவில் வருகிறது. தமிழ் மக்களின் பொறுப்பு என்ன?

இவை தமிழ் அரசு, தமிழ் காங்கிரஸ் ஆகிய இரு பெரும் தமிழ்க்கட்சிகளினதும் அடிப்படைக் கொள்கைகளும் இலட்சியமுமாகும். இந்த இலட்சியத்தை அடைவதில் இரு கட்சிகளுக்குமிடையில் கருத்துவேற்றுமைசிறிதளவு தான் உண்டு. அதாவது இப்போதுள்ள ஒற்றையாட்சி அமைப்பிலேயே தமிழ் மக்கள் சகல உரிமைகளுடன் வாழ முடியுமென்பது காங்கிரஸின் நம்பிக்கை. ஒன்றுக்கு மேற்பட்டமொழிபேசும், ஒன்றுக்குமேற்பட்ட இனத்தவர் வாழும் இலங்கையைப் போன்றஒரு நாட்டில் இணைப்பாட்சி எனப்படும் சமஷ்டி ஆட்சி அமைப்புமுறைதான் சிறுபான்மையினர் தங்கள் மொழி, கலை, கலாசாரத்தைப் பாதுகாத்து சுதந்திரமாக வாழமுடியுமென்பது தமிழ் அரசுக்கட்சியின் நம்பிக்கை. இந்த அரசியல் அமைப்பு அம்சம் ஒன்றைத்தவிர இரு கட்சிகளுக்கிடையிலும் அதிக வேறுபாடு இல்லை. இலட்சியமும் கொள்கையும் நல்லதாக இருந்தால் போதாது, அவற்றை அடைவதற்கான மார்க்கமும் சரியாக இருக்க வேண்டும். கொள்கையும் இலட்சியமும் இதுதான் என்று சொல்லிக்கொண்டிருப்பதாலும் பயனில்லை; இவற்றை அடைய முடியுமா, அதற்கான வாய்ப்பு இருக்கிறதா, இதுவரை சென்ற பாதை பயனளிக்கவில்லையெனில் புதியவழி காண வேண்டாமா? என்பவை பற்றியும் சிந்திக்கவேண்டும்.

இருபெரும் தமிழ்க்கட்சிகளின் இலட்சியமும் கொள்கையும் ஒன்றுக இருந்த போதிலும், இருகட்சிகளும் 1965-ம் ஆண்டுத் தேர்தலின் பின் 'தேசிய அரசாங்கத்தில்' அங்கம் வகித்து வந்துள்ள போதிலும் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளில் எவற்றைப் பெற்றிருக்கிறார்கள்? புதிதாகஎவற்றை பெற்றுள்ளனர், பொருளாதாரத் துறையிலாவது என்ன நன்

இன்று ஹஜ் பெருநாள்

# முஸ்லிம்களின் ஐந்தாவது கடமை ஹஜ் யாத்திரை

## கஃபா ஆலயம் தியாகச் சின்னம்

முஸ்லிம் மக்களின் பெருநாள்களில் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றுக விளங்கும் ஹஜ் பெருநாள் தியாகத்தைக் குறிப்பாக அமைந்துள்ளது. ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஐந்து கடமைகள் உள்ளன. இந்த ஐந்து கடமைகளுள் ஐந்தாவது கடமையாக ஹஜ்யாத்திரை அமைந்துள்ளது.

வருடாவருடம் பல்லாயிரக்கண காஞேர் யாத்திரை செய்து வணங்கும் தியாகத்தின் சின்னமாகிய கஃபா ஆலயம் மக்காவிலுள்ளது, இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னர் இறைவனின் கட்டளைப்படி இபுருகீம் நபியினுலும் அவர் மைந்தராலும் நிர்மாணிக்கப்பட்ட இந்த ஆலயத்துக்கான இடத்தை இறைவனே காண்பித்துக் கொடுத்ததன் காரணத்தாலேயே அந்த ஆலயம் மிகப் புனிதமானதாகக் கருதப்படுகிறது. பாலைவன மத்தியிலேயமைந்த இந்த புனித ஸ்தலத்திற்கு உலகெங்கும் உள்ள முஸ்லிம் மக்கள் ஏழைகளாகவிருந்தாலும் சரி, பணக்காரர்களாக விருந்தாலும் சரி யாத்திரை செய்வதையே தங்கள் வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்வர்.

### தியாகச் சின்னம்

உலக முஸ்லிம்களின் ஒற்றுமைக்கும் சாந்திக்கும் தியாகத்துக்கும் அடையாளமாக விளங்கும் இந்த கஃபா ஆலயத்தைச் தரிசிக்கச்செல்லும் மக்கள் 'இஹ்ராம்' என்னும் வெள்ளையுடையணிந்து

ஒருவருக்கொருவர் இன, மத, சாதி வேறுபாடின்றி சகோதர வாஞ்சையோடு இப்பிருகீம் நபியவர்களும், அவரின் அருமை மைந்தர் இஸ்மாயில் நபியும் கட்டி முடித்த கபதுல்லா ஆலயத்தை வலம் வருவார்கள். வலம்வரும் பொழுது உயர்ந்த அரசியல் தலைவர்களானுலும்சரி, இளைஞர்கள், பெண்கள், முதியோர் பாலர்கள் எவரானுலும்சரி, ஒன்ருகவே சரிசமனுகவே வலம் வருவார்கள்.

### அற்புதம்

ஹஜ் யாத்திரை செய்யும் பல லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுபட்டு ஒரே எண்ணத்தோடு ஒரே இறைவனை வணங்கி உருகும் காட்சி அற்புதமாகும். முஸ்லிம்களின் 5ம் கடமையாகிய புனித ஹஜ்ஜை நிறைவேற்றுதல் எல்லா முஸ்லிம்களாலும் மேற்கொள்ளமுடியாததொன்றுகும். பணவசதியுள்ளவர்களே நிறைவேற்றக்கூடிய கடமையுமாகும். வசதியற்றவர்கள் தங்கள் அன்ருட வாழ்வில் அயலவரோடு சேர்ந்து பிரார்த்திப்பதுபோல் கஃபா அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நினைந்து வருடமுறை தனது பிரதேசத்தோடு சேர்ந்து இத் திருநாளில் வணங்கலாம்.

முஸ்லிம் மக்களுக்கு சுவர்க்கத்தை அளிக்க வல்லது ஹஜ் என திருநபி (ஸல்) அவர்களே கூறியிருக்கிறார்கள். எவனொருவன் விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடாமல் ஹஜ்ஜு செய்கின்ருனே அவன் அன்று பெற்றெடுத்த பாலன் போல் ஆகிவிடுவார் என்றும், இவ்வாறு நிறைவேற்றப்படும் ஹஜ்ஜுக்கு 'சுவர்க்கம்' தவிர வேறு கூலியில்லையென இஸ்லாம் கூறுகிறது. இத்தகைய சுவர்க்கத்தையளிக்கவல்ல ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பும் முஸ்லிம்கள் 'ஹாஜி' என அழைக்கப்படுவர்.

இவ்வாறு வருடத்தில் ஒரு நாள் வரும் ஹஜ் திருநாளின் தியாகச் சின்னமான கஃபா ஆலயம் அல்லாஹ்வின் தனித்தத்துவத்துக்கும் மக்கள் சமுகத்தின் சகோதரத்துவத்துக்கும் சின்னமாக விளங்குகிறது. இதனை உட்பொருளாக வைத்து உலகெங்கும் ஏகத்துவசகோதரத்துவத்தை நிலைநிறுத்துவதே ஹஜ்ஜின் பி[illegible]ான நோக்கம் அல்லது குறிக்கோள் எனக் கொள்ளின் மிகையாகாது.

## சியவச டிக்கட்டுகளை பாடசாலைகளில்விற்கக்கூடாது

### மாநகரசபைக்குவரும் பிரேரணை

யாழ்ப்பாணம், வியா. பாடசாலைகளில் சியவச சுவீப் டிக்கட்டுகளை விற்பனை செய்யக்கூடாதென கல்வி மந்திரியைக்கோரும் பிரேரணையொன்றை, யாழ்ப்பாணம் மாநகரசபையில் உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் கொண்டுவரவிருக்கிறார்.

லட்சக் கணக்கான மாணவர்களையும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களையும், 'சியவச' டிக்கட்டை வாங்கும்படி நிர்ப்பந்தம் நடைபெறுவதாகவும், மாணவர்களின் மனதில் சூதாட்ட எண்ணத்தை வளர்க்கும், இந்த சுவீப் விற்பனையை பாடசாலைகளில் தடைசெய்யவேண்டுமென்றும் திரு. ஏ. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தேசிய சுவீப் விற்பனை செய்யப்படும்போது, 'சியவச' சுவீப் டிக்கட்டுகளையும் பொது இடங்களில் விற்பனை செய்யலாம். பாடசாலைகள் இந்த டிக்கட்டுகள் விற்பனை செய்யப்படுவதால் வகுப்பு நேரம் வீணுகிறது. மாணவர்கள் சந்தைகளிலும், தெருக்களிலும், பஸ் நிலையங்களிலும், வீடுவீடாக[illegible]ன்றும் டிக்கட்டை விற்பனை செய்கின்றனர். இதனுல் அவர்களின் படிப்பு பாழாகிறது. ஆதலால் பாடசாலைகளில் சுவீப் டிக்கட் வி[illegible]னை செய்யக்கூடாது

குழந்தை

சாவகச்சேரி நகரசபை

## குழப்பமான நிலைமையில் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன் சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தை தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலை உருவாகியதை தொடர்ந்து தலைவர் மீண்டும் கூட்டத்தை ஒத்திவைத்தார். ரவுண் வட்டார உறுப்பினரின் 10 கேள்விகளில் ஒன்றுக்கு தலைவர் அளித்தபதிலை ஏற்க முடியாதென்றும், அதற்கு சரியான பதில் அளித்தபின்னரே கூட்டத்தை நடத்த வேண்டும் என பல அங்கத்தவர்கள் வற்புறுத்தினுர்கள். இதைத்தொடர்ந்து கூட்டம் நடத்த இயலாத நிலையை உண்டுபண்ணியதால் கூட்டத்தை ஒத்திவைக்கிறேன்' என்று தலைவர் திரு. சு. கனகரத்தினம் கூறி கூட்டத்தைஒத்திவைத்தார்.

சாவகச்சேரி நகரசபைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை திரு. சு. கனகரத்தினம் தலைமையில் ஆரம்பமானது. சுமார் இரண்டு மணி நேரமாக கடந்த கூட்ட அறிக்கையில் பல திருத்தங்கள் செய்யப்பட்டு அங்கிகரிக்கப்பட்டது. சுமார்இரண்டு மணிநேரமும் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன.

மின்சார அதிபருக்கு மோட்டார் வாகனம் திருத்துவதற்கு 3 மாத அடிப்படைச் சம்பளம் வழங்க வேண்டுமென்றும், சுகாதார இன்ஸ்பெக்டர் கடமையாற்றியதற்காக, சுகாதாரப் பகுதிக்கு 68-ம் ஆண்டுப் பணமான 1440 ரூபாவை கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ரவுண் வட்டார உறுப்பினர் திரு. கே. மயில்வாகனத்தின், 10 கேள்விகளில் ஒன்றுக்கு தலைவர் அடுத்த கூட்டத்தில் பதிலளிக்கப்படும்' என்று கூறியதைத் தொடர்ந்து, கூட்டத்தில், மீண்டும் காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றன.

1968-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 1-ம் தேதி தொடக்கம். 1969-ம்ஆண்டு தைமாதம் 15-ம் தேதி வரை சபையால் வீதி வேலை செய்வதற்கு ஒப்பந்தகாரருக்கு கொடுக்கப்பட்ட பணத்தின் தொகை என்ன? ஒப்பந்தகாரரின் பெயர்? வட்டார இலக்கம்; கொடுக்கப்பட்டபணம் வட்டார ரீதியாக?- என்று திரு. க. மயில்வாகனம் தலைவரை கேட்டிருந்தார். இதற்கு தலைவர் அடுத்த கூட்டத்தில் பதிலளிக்கப்படும் என்று கூறினுர்.

தலைவரால் கொடுக்கப்பட்ட மறுமொழியை ஏற்காது, அதற்கு உடனடியாக பதில்தந்தே கூட்டம்நடத்த வேண்டுமென திரு. மயில்வாகனம் கூறினுர். இதைத் தொடர்த்து தலைவர் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

## வாரியாருக்கு ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படவில்லை. எது எப்படியாகிலும் அதற்காகயாரும் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதை அரசாங்கம் ஆதரிக்காது. எவராய் இருந்தாலும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். வாரியார் உடல்நலமில்லாத நிலையில் மேலும் அங்கிருந்தால் குழப்பத்துக்கு இடமாகும் என்றுதான் நெல்வேலியிலிருந்து சென்றுர். இது சம்பந்தமாக பொலிசார் வழக்குப் பதிவுசெய்து புலன் விசாரணைகள் நடத்துகிருர்கள். வாரியாருக்கு தக்க பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்படும்.

திரு. வினுயகம்:-

நெய்வேலி கூட்டத்தில் திரு. அண்ணுதுரையின் பெயரைக் குறிப்பிட்டு வாரியார் பேசவேஇல்லை.

முதல்வர்:- அவரே அவ்வாறு பேசியது தவறுதான் என்று கூறி மன்னிப்புக் கேட்டிருக்கிருர்.

வினுயகம்: 200 க்கும் மேற்பட்டவர்கள் அவரைச்

## அத்திவாரக்கல்

யாழ்ப்பாணம், வியாழன் பூநகரி முளங்காவில் பிள்ளையார் கோவில் மகா கோவில் மண்டபம், ஸ்தம்பமண்டபம் மடைப் பள்ளிஆகியவற்றிற்கு, அண்மையில் விஜயம்செய்த காணி நீர்ப்பாசன நிரந்தரக் காரியதரிசி திரு. எஸ். ஸ்ரீஸ்காந்தா அத்திவாரக்கல் நாட்டினுர். (ந. நி.)

## ஆலோசனை மகாநாடு

யாழ்ப்பாணம், வியாழன் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக இன்று மாலை ஆலோசனை மகாநாடு ஒன்று யாழ், இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (ந. நி.

## ஐயாறன் எழுதுவது

பத்திரிகை உலகிலே எனக்கு வழிகாட்டி உதவிய குருமார்களில் ஒருவரான அலி ஜனுப் அல்ஹாஜ் பா. தாவூத் ஷா பி. ஏ. அவர்கள் சென்னையிலே இரு நாட்களுக்கு முன் காலமானதாக அறிந்து என் மனம் மிக வருந்தியது.

'ஜனநாயகம்' என்ற பித்தாபுரம் மகாராஜா நடத்திய தமிழ் தினசரியிலிருந்து விலகி சென்னையிலே இனி என்ன என்று சற்றே திகைத்திருக்கையில், ஆசிரியர் தாவூத்ஷா அவர்கள் என்னை அழைத்து, தமது 'தாருல் இஸ்லாம்'' வாரம் இருமுறை பத்திரிகையில் உதவி ஆசிரியராக நியமித்து உதவியதற்கு என் மனம் முதல் நன்றி செலுத்துகிறது.

அங்கு தொண்டாற்றும் வாய்ப்பு சில மாதங்களுக்கே கிடைத்ததென்ருலும், தாவூத்ஷா அவர்களிடம் தமிழை அதிக இலக்கணப் பிழையின்றி எழுதக் கற்றுக் கொள்ள முடிந்தது என் பாக்கியமேயாகும். தலையங்கங்கள் அரசியல் கட்டுரைகள் முதலியவற்றை அவர் 'புருப்' பார்த்து திருத்தி என்னிடம் அனுப்புவார். கருத்துக்களில் திருத்தாமல் இலக்கணப் பிழைகளையே திருத்துவார். அவர் திருத்துவதைப் படித்துவிட்டு எவ்வளவோ கற்றுக்கொண்டேன். சம்பாதித்துக் கொண்டே தமிழ்ப்பாடமும் படிக்கக் கூடியதாக இருந்தது. அந்த நன்றியை என் நெஞ்சம் எப்படி மறக்க முடியும்?

அது மட்டுமல்ல பல இஸ்லாமிய அன்பர்களின் நட்பு கிடைத்ததுடன் இஸ்லாத்தின் மேன்மையையும், இஸ்லாமியரின் சிறந்த பண்பையும் அறிய எனக்கு அங்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. ஆசிரியர் பகுதி வேலையுடன் பத்திரிகைக்கு விளம்பரம் சேகரித்து, சம்பளத்தை விட அதிக ஊதியம் பெற உதவினுர்கள். 'ஆனந்த விகடன்' பத்திரிகையின் உரிமையாளரும் கோடீஸ்வரருமான எஸ். எஸ். வாஸன் அவர்களும் 'தாருல்இஸ்லாம்' பத்திரிகைக்கு ஒரு சமயம் விளம்பரம் சேகரித்துக் கொடுத்து கமிஷன் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

தஞ்சாவூர் மாவட்டத்திலே நாறையூரில் பிறந்த அவர், பி. ஏ. பரீட்சையில் தேறியதுடன் மதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிப்போட்டிக்காக வளைந்து கொடுப்பதுண்டு. கடந்தகால நிகழ்ச்சிகள் இதற்குச் சான்று.

அடுத்த பொதுத் தேர்தல் விரைவில் வருகிறது. தமிழ் மக்களின் பொறுப்பு என்ன? தமிழ்த்தலைவர்களின் கடமை என்ன? காலம் கடந்து விடுவதற்கு முன்னர் ஆராய்ந்து தகுந்த ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டியது அவசியம். 1947-ம் ஆண்டிலிருந்து இதுவரை வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியையும் அகில இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியையுமே வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்கள் அனுப்பி வந்திருக்கிருர்கள். சுயேச்சையாளர் சிலர், ஐக்கிய தேசியக்கட்சிப்பிரதிநிதிகள் இரண்டொருவர், ஓர் இடதுசாரி அபேட்சகர் ஆகியோரும் இந்த இரு மாகாணங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப் பட்டிருக்கின்றனர். ஆயினும் தமிழ்க்காங்கிரஸ் தமிழ் அரசுக் கட்சியினர் மீதே இவ்விரு மாகாணங்களும் அதிக நம்பிக்கை வைத்து ஆட்சிமன்றத்தில் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பதற்காக அனுப்பி வந்திருக்கின்றனர். அதாவது தமிழ் மக்கள் இருகட்சித் தலைவர்களின் ஆற்றலிலும் சேவையிலும்நம்பிக்கை வைத்துள்ளனர்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கும் சகல உரிமைகளும் இருக்கவேண்டும். இந்த நாட்டின் சுதந்திரத்தில் தமிழ் மக்களுக்கும் பங்கு உண்டு. தமிழ்மக்களின் உரிமைகள் சுதந்திரத்தின் பின் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வந்திருப்பதால், இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதுடன், இந்தநாட்டில் பெரும்பான்மையினரான சிங்கள மக்களுடன் சமமாகவாழ வழிவகுப்பது.

அங்கம் வகித்து வந்துள்ள போதிலும் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளில் எவற்றைப் பெற்றிருக்கிருர்கள்? புதிதாகஎவற்றை பெற்றுள்ளனர், பொருளாதாரத் துறையிலாவது என்ன நன்மையைப் பெற்றுள்ளனர்?

தமிழ்மொழிச் சட்டத்துக்கு விசேஷ விதிகள் கொண்டு வரப்பட்டது உண்மை. ஆனல் விசேஷ விதிகள் அமுல்நடத்தப்படுகின்றனவா? உத்தியோக மொழிச்சட்டத்தினுல் தமிழ்மக்கள் உத்தியோக வாய்ப்பை இழந்துவிடவில்லையா? மாவட்டசபைகள் அமைக்கப்படுமென பிரதமர் கொடுத்த வாக்குறுதியே கைவிடப்படவில்லையா?

தமிழ் மக்களின் நிலை நான்குவருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிட இன்று மிக மோசமடைந்திருக்கிறது. இருபெரும் தமிழ்க்கட்சியினரதும் கொள்கையும்இலட்சியமும் ஒன்ருக இருப்பினும் பல்கலைக்கழகம், மாவட்ட சபைகள் ஒவ்வொன்றிலும் வேறுபட்டு பகிரங்கமாகப் பொது மேடைகளிலும் பத்திரிகைகளிலும் ஒருவர் மீது ஒருவர் வசைபாடி, தமிழ்ச் சமூகத்தில் வேற்றுமை அதிகரிக்கவும், மற்றவர்கள் இதை தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளித்தது தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை. தேர்தல் சமீபித்ததும் ஒருவர் மீது ஒருவர் வசைபாடுவது அதிகரிக்கலாம்.

இதற்கு இனியும் இடமளிக்காமல் கடந்த கால அனுபவங்களை உணர்ந்து, தமிழ் மக்களின் தேவைகளை, பொதுக் கொள்கைத் திட்டமாக வகுத்து அவற்றை அடைவதற்கான வழியை இருபெரும் தமிழ்க் கட்சிகள் மட்டுமல்ல தமிழ்மக்களின் நலனில் அக்கறையுள்ளஅனைவரும் ஒன்று கூடி வகுக்க வேண்டியது அவசியம்.

## பிரிவுபசாரம்

புத்தூர், புதன்

கடந்த 9 வருடகாலம் புத்தூர் கிராமசபையில் விகிதாராக்க் கடமையாற்றி இம்மாதம் முதல் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திரு. சி. தம்பையா அவர்களைப் பாராட்டி கிராமசபைத் தலைவர் திரு. சி. நடராசா தலைமையில் பிரிவுபசாரம் நடைபெற்றது.

திரு. கா. சின்னத்துரை, திரு. மு. திருநாவுக்கரசு, திரு. ப. குகதாசன், திரு. ஆ. கைலாயபிள்ளை ஆகியோர் இவரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

## மாநகரசபையில் 'அண்ணா' படம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாநகரசபையிலுள்ள இறைவரி காரியாலயத்தில் அறிஞர் அண்ணாவின் படம் சுவரில் தொங்கவிடப்பட்டுள்ளது. அதே அறையில், ஜனதிபதி கென்னடி, பிரதமர் டட்லி சேனநாயகாவின் படங்களும் காணப்படுகின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 27-ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

கும்பிட நிர்ப்பந்தம் நடைபெறுவதாகவும், மாணவர்களின் மனதில் சூதாட்ட எண்ணத்தை வளர்க்கும், இந்த சுவீப் விற்பனையை பாடசாலைகளில் தடைசெய்யவேண்டு மென்றும் திரு. ... டிக்கட்டை விற்பனை செய்கின்றனர். இதனுல் அவர்களின் படிப்பு பாழாகிறது. ஆதலால் பாடசாலைகளில் சுவீப் டிக்கட் விற்பனை செய்யக்கூடாது

யாழ். நகரில்

# இந்த ஆண்டுக்குள் புதிய பல வைத்தியசாலைகள்

யாழ்ப்பாணம், வியா.

இந்த ஆண்டு முடிவதற்குள் யாழ்ப்பாண நகரில் 4 ஆங்கில டிஸ்பென்சரிகளும் 4 சுதேச ஆயுர்வேத வைத்தியசாலைகளும் நிறுவப்படவிருக்கின்றன.

யாழ்ப்பாண மாநகர சபையின் நிதிக்குழு இதற்கான பணத்தை ஒதுக்குவது பற்றி இப்போது ஆராய்ந்து வருகின்றது.

யாழ்ப்பாண நகரில் போதிய டிஸ்பென்சரிகளும் சிறு வைத்தியசாலைகளும் இல்லாததால் அரசினர் ஆஸ்பத்திரிக்குச் செல்வோர் அதிகரித்து வருவதாலேயே நகரில் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் இந்த நான்கு ஆங்கில டிஸ்பென்சரிகளையும், நான்கு ஆயுர்வேத வைத்தியசாலைகளையும் நிறுவ முடிவுசெய்யப்பட்டிருப்பதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

இதே வேளையில் யாழ்ப்பாண நகருக்கு தற்போது நிரந்தரமான சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் இல்லாததால், உடனடியாக ஒரு சுகாதார வைத்திய அதிகாரியை நியமிக்குமாறு உள்ளூராட்சி அமைச்சரைக் கோருவதென்றும், இல்லாத பட்சத்தில் தற்காலிகமாக ஒருவரை நியமிக்க சபைக்கு அனுமதி தருமாறு அமைச்சரைக் கோருவதென்றும் யாழ்ப்பாண மாநகரசபை ஏகமனதாக முடிவுசெய்துள்ளது. (கா. நி.)

# 'அதிகாரிகள் திருப்திக்காக மட்டும் பணியாற்றக் கூடாது'

## ஆசிரியர்க்கு கல்வி அதிகாரிகூறுகிருர்

திருமலை, புதன்

"கல்விப் பிரதம அதிகாரியையோ அன்றித் தலைமை ஆசிரியர்களையோ திருப்திப்படுத்தும் ஒரே நோக்குடன் மட்டும் ஆசிரியர்கள் பணிபுரியக் கூடாது."

இவ்வாறு கொட்டியார் பற்று என்னும் இடத்தில் 300 க்கும் மேற்பட்ட ஆசிரியர்களைக் கொண்ட ஒரு மாநாட்டில் கல்விப் பிரதம அதிகாரி திரு. ஏ. சந்திரசேகரம் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- "ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களது பணி தங்களது தேசத்துக்கான சேவை என்பதை கட்டாயம் உணரவேண்டும். அந்த ரீதியிலான சேவை புனிதமாகுமென்பதை அவர்கள் மாணவர்களுக்குக் கல்விபுகட்டும்போது மனதில் கொள்ள வேண்டும். ஏனெனில், கற்பித்து விளக்கம் கொடுப்பது தெய்வீகத் தன்மை வாய்ந்தது.

தாம் பணியாற்றவேண்டிய சூழ்நிலையில் தேசசேவைக்கென அவர்கள் பொறுமையுடன் கடமையாற்றுவதை விட்டுவிட்டுத் தமது குறைபாடுகள் யாவற்றையும் பெரிதுபடுத்திமுறையீடு செய்துகொண்டேயிருந்தால் தங்களது சிறந்த தேசப்பணிக்கு வாய்ச் சேவை மட்டுமே புரிபவர்களாவார்கள்.

## நன்றி நவிலல்

சண்முகராசா:- எனது அன்புக்கணவரும் இளைப்பாறிய ஆசிரியருமாகிய ச. சண்முகராசா அவர்களின் ஈமக்கிரியைகளில் சமுகம் அளித்தவர்கள் மலர் வளையங்கள் அனுதாபச் செய்திகள் அன்ப்பியவர்கள் ஆகிய அன்பர்கள் நண்பர்கள் உறவினர் அனைவர்க்கும் விசேடமாக இராமநாதன் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனங்கனிந்த நன்றியையும் கடமைப்பாட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். திருமதி அமுதவல்லி சண்முகராசா ஆசிரியை உடுவில். 710

நோக்கம் அல்லது குறிக்கோள் எனக் கொள்ளின் மிகையாகாது.

## குழந்தை விளையாட்டரங்கு

உடுப்பிட்டி, புதன்

தொண்டமனுறு சின்னக் கடற்கரையில் குழந்தைகள் விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது. இவ்விளையாட்டு மைதானம் அமைப்பதில் ஆட்சேபனை இல்லையென்றும், அதற்குரியவிளையாட்டு உபகரணங்களை விளையாட்டமைச்சிடமிருந்து பெற்றுக் கொடுப்பதெனவும் உடுப்பிட்டி கிராம சபை தீர்மானித்துள்ளது.

## நெல்லியடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நடைபெறும் சீட்டிழுப்பை முன்னிட்டு நெல்லியடிப் பட்டினம் விழாக் கோலம் பூண்டுள்ளது. இச் சீட்டிழுப்பைப் பார்வையிட ஆயிரக்கணக்கானேர் திரளுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இதற்கான வசதிகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பத்திரிகை நிருபர்களுக்கும் முன் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

யார் பேசவேஇல்லை.

முதல்வர்:- அவரே அவ்வாறு பேசியது தவறுதான் என்று கூறி மன்னிப்புக் கேட்டிருக்கிருர்.

விஞயகம்: 200 க்கும் மேற்பட்டவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு நிர்ப்பந்தப்படுத்தியதால் அவ்வாறு கூறினுர்.

முதல்வர்: வாதத்திற்காக நீங்கள் சொல்வதை ஒப்புக்கொள்வதாக இருந்தாலும் தஞ்சையில் 15, 16 ம் தேதிகளில் அண்ணா வைக்குறிப்பிட்டு "அமெரிக்கா சென்றும் பிரயோசனமில்லை, மில்லர் வந்தாலும் பிரயோசனமில்லை, ஆண்டவனை நம்பாதவர்களுக்கு இப்படித்தான்நேரும்'! என்றும் சிதம்பரம் கோவிலில் கொடுக்கப்பட்ட விபூதியை வாங்கி பிறகு வீசிஎறிந்ததால்தான் முன்னுள் கல்வி அமைச்சருக்கு இரண்டே ஆண்டில் பதவி போய்விட்டது என்றும் பேசியுள்ளார்.

விஞயகம்:

நெய்வேலியில் நடந்ததைப்பற்றித்தான் இங்கு குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். வன்முறையைக் கையாளுபவர் யாராய்இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்க பொலிசாருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும்.

பின்னர் கவர்னர் உரை மீது பேசிய திரு. கிராமணி யாரும் வாரியார் சம்பவம் பற்றிக் குறிப்பிட்டார்.

பிரவேசம் சம்பந்தமாக இன்று மாலை ஆலோசனை மகாநாடு ஒன்று யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (ந. நி.

## கொங்கிறீற் பாலம்

யாழ்ப்பாணம், வியா.

வவனியா மாவட்டத்திலுள்ள பறங்கி ஆற்றுக்கு மேல் 20 அடி நீளமான நவீன கொங்கிறீற் பாலம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. (ந. நி.

(8-ம்கலத் தொடர்ச்சி)

எளிய குழந்தைகளின் தேவார திருமுறைகளும் அதில் அவர்களுக்குள்ள ஆர்வமும் என் மனதைப் பெரிதும் கவர்ந்தன.

0 0 0

பாடுவார் பசி தீர்ப்பாய்
பரவுவார் பிணிகளைவாய்,
ஓடுநன் கலனுக உண்
பலிக் குழல்வானே,
காடு நல்விடமாகக் கடு
விடுள் நடமாடும்,
வேடனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே.

-ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள்

பெற்றது குடிப்பிடத்தக்கதாகும்.

தஞ்சாவூர் மாவட்டத்திலே நாறையூரில் பிறந்த அவர், பி. ஏ. பரீட்சையில் தேறியதுடன் மதுரை தமிழ்ச்சங்கப் பரீட்சையில் பண்டிதர் பட்டமும் பெற்ருர். பேசுவதும்கூட இலக்கணத் தமிழில்தான் பேசுவார்கள்.

திருக்குர்ஆனை அவர் தமிழில் மொழி பெயர்த்ததுடன், 35 அரிய நூல்களை வெளியிட்டார். சிறந்த எழுத்தாளருடன் பேச்சாளருமாவார். கம்பராமாயணத்திலிருந்து பல மேற்கோள்களை அவர் கூறுவார். மாஜிஸ்திரேட்டாகக் கடமை பார்த்து, சிலாபத் காலத்திலே அந்த வேலையை உதறித்தள்ளி பிரிட்டன் சென்று இரண்டு வருடகாலம் மதப் பிரசாரம் செய்துவிட்டு சென்னையில் 'தாருல்இஸ்லாம்' பத்திரிகையை முதலில் மாஸிகையாகவும், பின்னர் வாரப் பதிப்பாகவும், வாரம் இருமுறையாகவும் வெளியிட்டு இஸ்லாமிய சமூகத்துக்கும் தமிழுக்கும் அரிய தொண்டாற்றினுர். அரிய சீர்திருத்த வாதியவர்.

சென்னை கார்ப்பரேஷனில் ஆடர்மனுக இருந்து பல வருடம் தொண்டாற்றி தமது 84-வது வயதில் காலமாகினுர். இலங்கைக்கும் பன்முறை வந்து இஸ்லாமிய பிரசங்கங்கள் செய்து தொண்டாற்றி பலரது அன்பைப் பெற்றுள்ளார். அவர் மறைவு இஸ்லாதுய உலகுக்கும், தமிழுக்கும் பேரிழப்பாகும். அவர்களுடன் சேர்ந்து என் உள்ளம் அவருக்கு நன்றி கலந்த அஞ்சலி செலுத்துகிறது.

0 0 0

நேற்று முன்தினம் இரவு கொட்டும் பனியிலே உடுத்திரபுரத்திலே நூற்றுக்கணக்கான அன்பர்களும் தாய்மார்களும், பிள்ளைகளும் கூடி அமரர் அண்ணுவுக்காக இரங்கற் கூட்டம் நடத்தினர். அண்ணு அவர்களை அவர்களில் யாரும் பார்த்ததுமில்லை. என்ருலும் அவர்கள் அங்கு அவ்வளவு அதிகமாகக் கூடி பரம ஆஸ்திகர்களும், நன்றியுடன் அஞ்சலி செலுத்தியதின் காரணமென்ன? உலகத் தமிழரை ஒன்றுபடுத்தி, அவர்களது மதிப்பை உயர்த்தவும், அவர்களது கண்ணீரைத் துடைக்கவும் அவர் இரவு பகல் தெரியாது உழைத்தாரல்லவா? ஜீவர்களின் பணியே சிவப்பணியாகுமன்ருே!

கூட்டத்துக்கு முன் பல குழந்தைகளுடன் பேசினேன். அங்குள்ள பல

[7-ம் கலம் பார்க்க

யாழ். நகர எல்லையில் வசிக்கும்

# பல்கலைக்கழகமாணவர் ஐவருக்கு யாழ். மாநகரசபை உதவும்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக இருந்து, தற்போது பல்கலைக் கழக புகுமுக வகுப்பில் கல்விபயிலும் 5 மாணவர்களுக்கு அதிர்ஷ்டம் கிடைக்கவிருக்கின்றது. பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களுக்கு 1969 70-ம் ஆண்டு காலத்தில் செல்லவிருக்கும், ஐவருக்கே மாநகரசபை வழங்கும் இந்தச் சன்மானம் கிடைக்கும்.

யாழ்ப்பாணம் மாநகர சபை இந்த முடிவை ஏகமனதாக தீர்மானித்ததோடு, இதற்கான உபவிதிகளைத் தயாரிக்க ஐவர் கொண்ட குழு ஒன்றையும் நியமித்துள்ளது.

மாநகரசபை அங்கத்தவரான திரு. அ. விசுவநாதனுல் கொண்டுவரப்பட்ட இப்பிரேரணையில் யாழ். மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கும் மாணவர்கள் 1969 70-ம் வருடம் முதல் இலங்கைப் பல்கலைக் கழகங்கட்கு (கொழும்பு, பேராதனை) இடம்பெறும் பட்சத்தில் அவர்களுள் பண உதவி வேண்டிய 5 மாணவாகட்கு இச்சபையினுல் சன்மானம் வழங்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி ஆராய்ந்து உபவிதிகளைத் தயாரிக்க துணை மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம், திரு, அ. விசுவநாதன், திரு. அ. நடராஜா, திரு. என். அந்தோனிப்பிள்ளை, திருமதி அந்தோனியார் சுவாமிநாதர் ஆகிய ஐவரையும்: கொண்ட குழு முதல்வர் திரு. எஸ். நாகராஜாவினுல் நியமிக்கப்பட்டது. (கா. நி.)

## மரண அறிவித்தல்

கதிரவேல் முத்தம்மா

காலஞ்சென்ற திரு. சி. கதிரவேல் அவர்களின் அருமை மனைவியும் புகையிரதப்பகுதியிலிருந்து இளைப்பாறிய திரு. எதிர்நாயகத்தின் தாயாரும் மகேஸ்வரியின் மாமியாரும் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் கடமையாற்றும் நாகநாயகம், மகேசநாயகம், யோகநாயகம் என்போரின் பேத்தியாருமாகிய திருமதி முத்தம்மா சிவபதம் எய்திவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்புத்துறையிலுள்ள துண்டி மயானத்தில் 26-2-69 இல் நடைபெற்றது. 708

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org